Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
WEDNESDAY, MARCH 22, 2023

புதன்கிழமை மார்ச் 22, 2023 | ஒளி: 08 கதிர்: 234 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | Free

# வடக்கில் முளைக்கும் விஹாரைகளை அகற்றவும்



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர் தாயகத்தை அழிக்கும் வகையில் திட்டமிட்ட வகையில் சிங்கள குடியேற்றங்கள் உருவாக்கப்படுகின்றன என குற்றஞ்சாட்டிய தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் எம். பி செல்வராசா கஜேந்திரன், வடக்கில் நிர்மாணிக்கப்படும் பௌத்த விஹாரைகளை அந்தந்த இடங்களிலிருந்து அகற்றவேண்டுமென வலியுறுத்தினார்.

யாழ். நாவற்குழி பௌத்த விஹாரை, கைதடி விஹாரை, குருந்தூர்மலை விஹாரை, கொக்குத்தொடுவாய், மாங்குளம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டு வரும் விஹாரைகள் அகற்றப்பட வேண்டும் என்றார்.

பாராளுமன்றத்தில் நேற்று (21) செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பெற்றோலிய வளங்கள் சட்ட ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். சிங்கள ஆட்சியாளர்கள்தான் சிங்கள-தமிழ் மக்கள் மத்தியில் முரண்பாடுகளை உருவாக்கி, தமிழர்களுக்கு எதிரான வன்மங்களை கட்டவிழ்த்து விட்டார்கள்,

தொடர்ச்சி P2

# கொஞ்சம் உயர்ந்தது ரூபாயின் பெறுமதி




அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி செவ்வாய்க்கிழமை (21) அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களின் அடிப்படையில் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 316 ரூபாய் 84 சதமாகவும் விற்பனை விலை 334 ரூபாய் 93 சதமாகவும் பதிவாகியுள்ளது.

திங்கட்கிழமை (21), கொள்வனவு விலை 331 ரூபாய் 74 சதமாகவும் விற்பனை விலை 349 ரூபாய் 87 சதமாகவும் பதிவாகியிருந்தது.

மார்ச் 1ஆம் திகதி முதல் அதிகரித்து வந்த ரூபாயின் பெறுமதி மார்ச் 10ஆம் திகதி முதல் குறைந்து வந்த நிலையில், மீண்டும் ரூபாயின் பெறுமதி அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஊழல் ஒழிப்பும் நிர்வாக சீர்திருத்தமும் அவசியம்

## இலங்கைக்கு ஐஎம்எப் வலியுறுத்து

கடனுதவி திட்டத்தின் இரண்டு முக்கிய தூண்களாக ஊழல் ஒழிப்பும் நிர்வாக சீர்திருத்தமும் இருக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கான கடன் வசதிக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு அனுமதி வழங்கியுள்ள நிலையில், நிதியத்தில் இலங்கை விடயங்களைக் கையாளும் அதிகாரிகள், ஒன்லைன் ஊடாக வொஷிங்டனிலிருந்து செவ்வாய்க்கிழமை (21) ஊடக சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தனர்.





ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் பரிந்துரைக்கு இணங்க, இலங்கை அரசாங்கம் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்த உறுதிபூண்டுள்ளதாகவும் அதில் சொத்துப் பிரகடனம், சொத்து மீட்பு ஆகிய இரண்டும் உள்ளடங்குவதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தலைவர் மசாஹிரோ நொசாகி தெரிவித்தார்.

ஊழல் தடுப்புச் சட்டத்தின் மூலம் சொத்து குறைப்பு பகுதி கவனிக்கப்படும் என்றும் சொத்து மீட்பு பகுதி மார்ச் 2024 க்குள் தீர்க்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

# "கடனை மறுசீரமைக்கும் வலிமை பெற்றுள்ளது"



சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று குழுவால் நீட்டிக்கப்பட்ட கடன் வசதிக்கான அங்கிகாரம் கிடைத்துள்ள நிலையில், கடனை மறுசீரமைக்கும் வலிமை கொண்ட நாடு என்ற சர்வதேச அங்கிகாரத்தை பெற்றுள்ளதாகவும், அதன்படி இலங்கை வங்குரோத்தான நாடல்ல என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். எனவே இனிமேல் வழமையான கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பிக்கும் திறன் எமக்கு கிடைத்துள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட கடன்

தொடர்ச்சி P2

### சர்வதேச நாணய நிதியம் உட்பட பல விவகாரங்கள்:

# சஜித்தின் சரமாரி கேள்விகளுக்கு அவகாசம் கோரியது அரசாங்கம்



சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் எப்போது அமலாகும் மற்றும் தேர்தல் விவகாரம், கண்ணீர்ப்புகை, வரித் திருத்தம் மூலம் பெற்ற வருமானம் உள்ளிட்ட பல கேள்விகளை பாராளுமன்றத்தில் செவ்வாய்கிழமை (21) எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசாங்கத்திடம் இருந்து குறிப்பிட்ட பதில்களையும் விளக்கங்களையும் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

### காணாமல் ஆக்கப்படுதலுக்கு

# இலங்கைக்கே முதல் பரிசு



காணாமல் ஆக்கப்படுதலுக்கு பரிசு வழங்குவதானால் இலங்கைக்கே முதல் பரிசு வழங்க வேண்டும் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட பாரளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (21) இடம்பெற்ற மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் பெற்றோலிய வளங்கள் சட்ட ஒழுங்குவிதிகள்,

தொடர்ச்சி P2

# ஐஎம்எப் கடன் குறித்து வெட்கப்பட வேண்டும்

## பெருமை கூடாது என்கிறார் விஜித எம்.பி



சர்வதேச நாணய நிதியத்தின் (ஐஎம்எப்) கடன் உதவி நாட்டை இன்னும் பெரிய கடன் சுமைக்குள் தள்ளும் என்றும் இவ்வாறான கடனை பெற்றுக்கொள்வது தொடர்பில் பெருமையடையாது வெட்கப்பட வேண்டும் என்றும் தேசிய சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### கடன் வசதி தொடர்பில்

# உண்மையை மறைக்க வேண்டிய அவசியமில்லை



சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று குழுவால் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ள நீட்டிக்கப்பட்ட கடன் வசதி தொடர்பில் பொதுமக்களிடம் உண்மையை மறைக்க வேண்டிய அவசியமில்லை என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக

தொடர்ச்சி P2


# ஐஎம்எப் அனுமதிக்கு அமெரிக்கா வரவேற்பு

இலங்கைக்கான நீட்டிக்கப்பட்ட கடன் வசதிக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு அனுமதி வழங்கியுள்ளமையை அமெரிக்கா வரவேற்றுள்ளது. இதுவொரு நல்ல செய்தி என்றும் இந்தத் தீர்மானமானது நாட்டின் பொருளாதார மீட்சிக்கான முக்கியமான நகர்வு எனவும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். இலங்கை மக்கள் அனைவரும் செழிப்பாக வாழ்வதை உறுதிப்படுத்துவதற்கு, நல்லாட்சி,

தொடர்ச்சி P2

### சட்டக்கல்லூரி பரீட்சை:

# 112 வாக்குகளால் 'ஆங்கிலம்' தோற்றது




சட்டக்கல்லூரி மாணவர்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் பரீட்சை எழுத வேண்டும் என்ற வர்த்தமானி அறிவிப்பு, பிரதமர், அமைச்சர்கள், அரசாங்க மற்றும் எதிர்கட்சி எம்.பிக்களின் 112 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

சட்டக்கல்லூரி மாணவர்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் பரீட்சை எழுதவேண்டும் என்ற வர்த்தமானி செவ்வாய்க்கிழமை (21) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த வர்த்தமானிக்கு அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி எம்.

தொடர்ச்சி P2

### நிதியமைச்சின் செயலாளர்

# நீதிமன்றத்தை அவமதித்ததாக குற்றம் சுமத்தி 2 மனுக்கள்

## தண்டனை வழங்குமாறும் கோரிக்கை

உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை செயற்படுத்தத் தவறிய நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாக குற்றம் சுமத்தியும் அவருக்கு தண்டனை வழங்குமாறு கோரியும் உயர் நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (21) இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

தொடர்ச்சி P2

### ஈஸ்டர் ஞாயிறு விவகாரம்

# புலஸ்தினிக்கு உதவி செய்த பொலிஸ் அதிகாரிக்கு பிணை



**பாறுக் ஷிஹான்**

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் முக்கிய சூத்திரதாரியாக சந்தேகிக்கப்படும் புலஸ்தினி மகேந்திரன் (ஸாரா ஜஸ்மின்) என்பவரை இந்தியாவுக்கு தப்பிச் செல்ல உதவினார் என்று குற்றம் சுமத்தப்பட்டு மூன்று வருடங்களாக சிறையில் இருந்த தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரியை மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி என். எம். எம். அப்துல்லாஹ் பிணையில் விடுவித்தார்.

தலா 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான 2 சரீரப்பிணைகளிலும் 10 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், வெளிநாட்டு பயணத்தடையும் சாட்சியாளர்களை அச்சுறுத்தக் கூடாது என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# இராஜதந்திர நகர்வுகளை கையாண்டு அங்கிகாரம்

## ஜனாதிபதிக்கு அமைச்சர் ஜீவன் நன்றி தெரிவிப்பு



இலங்கை சர்வதேச நாணய நிதியத்தை 16 தடவைகள் நாடி வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்றும் இராஜதந்திர மட்டத்திலான நகர்வுகளைக் கையாண்டு சர்வதேச நாணய நிதியத்திடம் கடனுக்கான அங்கிகாரத்தை ஜனாதிபதி பெற்றுள்ளார் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### தொழிற்சாலை அமைப்பதாக கூறி

# தமிழர்களின் பாரம்பரிய இடம் பறிக்கப்படுகிறது

தொழிற்சாலை அமைப்பதாக கூறிக் கொண்டு, தமிழர்களின் உரிமைகளையும் இருப்பையும் இல்லாதொழிக்கும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தமிழர்கள் பாரம்பரியமான இடம் அழிக்கப்பட்டு

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# வடக்கில் முளைக்கும் விஹாரைகளை அகற்றவும்

அதற்கு இந்த ஒற்றையாட்சி அரசியல் முறைமை கட்டமைப்பு சாதகமாக அமைந்தது.யுத்தத்தின் பின்னர் நாடு அபிவிருத்தி பாதையில் செல்லாமல் ,அழிவுப் பாதையில் சென்றுள்ளது ,ஆகவே கடந்த 75 ஆண்டுகாலமாக கடைப்பிடித்த ஒற்றையாட்சி முறைமையை கைவிட்டு தமிழர் தொடர்ந்து வலியுறுத்தும் சமஷ்டி ஆட்சி அரசியல் முறைமையை அமுல்படுத்த வேண்டும்.இதுவே உண்மையான முறைமை மாற்றமாக இருக்கும் என்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வாதிகார ஆட்சி நோக்கிச் செல்கிறார்.இது நல்லதொரு நிலையல்ல,சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காக மேற்குலக நாடுகள் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும் புறச்சூழலை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. இதன் காரணமாக சர்வதேச நாணய நிதிய ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றுள்ளது, சர்வதேச நாணய நிதிய ஒத்துழைப்பு நல்லதோர் அடையாளமல்ல என்றார்.

தமிழர்களுக்கு எதிரான திட்டமிட்ட செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும், சவேந்திரசில்வாவினால் திறந்து வைக்கப்பட்ட விஹாரை அவ்விடத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும்.அத்துடன் கைதடியில் அமைக்கப்பட்டு வரும் விஹாரை,குருந்தூர்மலை விஹாரை ,கொக்குத்தொடுவாய்,மாங்குளம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டு வரும் விஹாரைகள் அகற்றப்பட வேண்டும். நாங்கள் பௌத்தத்திற்கும்,சிங்களவர்களுக்கும் எதிரானவர்கள் அல்ல,நயினைதீவு,கிளிநொச்சியில் உள்ள பௌத்த விஹாரைகளுக்கு எதிர்ப்பு றெிவிக்கவில்லை,விடுதலைப் புலிகள் அமைப்பு காலத்தில் கூட இந்த விஹாரைகள் இருந்தன,போராளிகளினால் எவ்வித பாதிப்பும் பௌத்த விஹாரைகளுக்கு ஏற்படுத்தப்படவில்லை.ஆனால் யுத்தத்தின் பின்னர் தமிழரின் தாயகம் இராணுவத்தின் துணை ஊடாக திட்டமிட்டு அழிக்கப்படுகிறது என்றார்.

# ஊழல் ஒழிப்பும் நிர்வாக சீர்திருத்தமும் அவசியம்

இலங்கையில் சமூக பாதுகாப்பு வலை திட்டங்களின் செயல்திறன், இலக்கு ஆகியவற்றை மேம்படுத்த அதிகாரிகள் தொலைநோக்கு நிறுவன சீர்திருத்தங்களையும் மேற்கொள்கின்றனர் என்றார்.

அத்துடன் முதியோர்களுக்கு (70 வயதுக்கு மேற்பட்டவர்கள்), ஊனமுற்றோருக்கான உதவித்தொகை, சிறுநீரக நோயாளிகளுக்கு நிதியுதவி என்பனவற்றை வழங்கும் சமூக பாதுகாப்பு வலைத் திட்டங்கள் சமுர்த்தி திட்டத்தை உள்ளடக்கியது (இலங்கையில் வறுமையை இலக்காகக் கொண்ட மிகப்பெரிய பணப் பரிமாற்றத் திட்டம்) என்றும் குறிப்பிட்டார்.

## கடனை மறுசீரமைக்கும்...

வசதிக்கான அங்கீகாரம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க செவ்வாய்க்கிழமை (21) விடுத்துள்ள விசேட உரையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் நாட்டின் அந்நியச் செலாவணியை, அதிகரித்துக் கொள்வதுடன், அத்தியாவசியப் பொருட்கள், மருந்துகள் மற்றும் சுற்றுலாவுக்குத் தேவையான பொருட்கள் மீதான இறக்குமதித் தடைகளை அரசாங்கம் படிப்படியாக நீக்கும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கைக்கு ஆதரவளித்த அனைத்து நாடுகளுக்கும், சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் இரு தலைவர்களுக்கும் இலங்கை மக்கள் சார்பாக தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் ஜனாதிபதி ரணில் தெரிவித்தார்.

இனிமேல் இந்த உடன்படிக்கையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அது தொடர்பான உடன்படிக்கை இன்று (22) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## நீதிமன்றத்தை அவமதித்ததாக குற்றம் சுமத்தி 2 மனுக்கள்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியை நிதி அமைச்சின் செயலாளர் தடுத்து வைப்பதைத் தடுக்கும் இடைக்கால உத்தரவை கடந்த 3 ஆம் திகதி, உயர் நீதிமன்றம் பிறப்பித்தது.

உயர் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு அமைய சிறிவர்தன செயற்படத் தவறியதாக குற்றம் சுமத்தி தேசிய மக்கள் சக்தியின் பாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இந்த மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

முன்னர் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவின் பேரில் நிதி அமைச்சின் செயலாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு மற்றோர் உத்தரவை பிறப்பிக்குமாறு மனுதாரர் கோரியுள்ளார்.

இதேவேளை, நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவை தண்டிக்குமாறு கோரி ஐக்கிய மக்கள் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

## சஜித்தின் சரமாரி கேள்விகளுக்கு அவகாசம் கோரியது அரசாங்கம்

நிலையியற் கட்டளை 27/ 2இல் விசேட கூற்றை முன்வைத்த போதே பல கேள்விகளை எழுப்பினார். எனினும், ஒற்றைக் கேள்விக்குக் கூட பதிலளிக்காத அரசாங்கம் கால அவகாசத்தைக் கோரியது..

சபையில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித்,

மக்கள் ஆணையை பெறாத தற்போதைய ஜனாதிபதியும் அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியை பெற்றுக்கொள்ள சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்துக்கு முன்வைத்திருக்கும் நிபந்தனைகள் என்ன என்பது குறித்து, சபையில் சமர்ப்பிக்காமல் உள்ளனர் என்றார்.

இந்த நிபந்தனைகளை பாராளுமன்றத்துக்கு விரைவாக சமர்ப்பிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தேசிய முக்கியத்துவம் என கருதி பின்வரும் கேள்விகளுக்கு அரசாங்கத்திடம் இருந்து குறிப்பிட்ட பதில்களையும் விளக்கங்களையும் எதிர்பார்க்கிறேன் என்று கேள்விகளை எழுப்பத் தொடங்கினார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை அரசாங்கம் கையொப்பமிட்ட ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாது?. குறித்த ஒப்பந்தத்தின் பிரகாரம், மறுசீரமைப்புக்கு ஆளாகும் அரச நிறுவனங்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் யாவை? ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகள் என்ன? அந்த ஒப்பந்தத்தை இவ்வாரம் இந்த சபைக்கு சமர்ப்பிக்க முடியுமா? என்ற கேள்விகளை அவர் எழுப்பினார்.

சரியான நேரத்தில் தேர்தலை நடத்தாத ஓர் நாட்டை ஜனநாயக நாடு என எவ்வாறு அழைக்க முடியும்? இந்த ஆண்டு தேர்தல் எதனையும் நடத்த அரசாங்கம் திட்டமிடவில்லையா? அவ்வாறு இல்லாவிட்டால், இரண்டாவது தடவையாகவும் திகதி குறிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை நிதியமைச்சு தேர்தல் ஆணைக்குழுவிற்கு வழங்காமைக்கான காரணங்கள் யாது? அரச அச்சகரால் வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்கு தேர்தல் ஆணைக்குழுவால் கோரப்பட்ட தொகை எவ்வளவு? அவ்வாறு கோரப்பட்ட தொகையில் எவ்வளவு தொகை இப்போது வழங்கப்பட்டுள்ளது? இன்னும் எவ்வளவு தொகை அரச அச்சகத்திற்கு கொடுக்க வேண்டும்? அந்த தொகையை எப்போது கொடுக்க முடியுமாக இருக்கும்?

புதிய வருமான வரிச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் மூலம், கடந்த 2 மாதங்களில் அரசாங்கத்துக்கு கிடைத்துள்ள வருமானம் எவ்வளவு? கடந்த காலத்தில் தொழில் வல்லுநர்களால் புதிய வருமான வரிச் சட்டத்தில் என்ன திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன? அந்தத் திருத்தங்களைச் செய்வதற்கு அரசாங்கம் சம்மதிக்கிறதா? புதிய வருமான வரிச் சட்டத்தில் அரசாங்கம் திருத்தம் செய்வதை எதிர்பார்ப்பதாக இருந்தால், அது எந்த முறையில் மேற்கொள்ளப்படும்? என்று வரிகள் குறித்த கேள்விகளையும் முன்வைத்தார்.

## ஐஎம்எப் அனுமதிக்கு அமெரிக்கா வரவேற்பு

வெளிப்படைத்தன்மையைக் குறிக்கும் கட்டமைப்பு மற்றும் நீடித்த சீர்திருத்தங்கள் முக்கியமானவை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## உண்மையை மறைக்க வேண்டிய அவசியமில்லை

அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் செவ்வாய்க்கிழமை (21) இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

இலங்கையை அடுத்த 48 மாதங்களில் யார் ஆட்சி செய்தாலும் அரசியல் கருத்துக்கள் இன்றி இணக்கமான வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும் இல்லையேல் உலக நாடுகளை சமாளித்து இந்த நாட்டை நடத்த முடியாது என்றும் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதும் அது தொடர்பான அனைத்து விடயங்களும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்துள்ளார் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று குழுவினால் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ள கடன் வசதி குறித்து தெரிவித்த அவர், இதற்கு முன்னர் 16 முறை சர்வதேச நாணய நிதியத்தை ஏமாற்றிவிட்டோம் என்று சுட்டிக்காட்டினார்.

## தமிழர்களின் பாரம்பரிய இடம்...

பறிக்கப்படுகிறது என்றும் இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட பாரளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (21) இடம்பெற்ற மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் பெற்றோலிய வளங்கள் சட்ட ஒழுங்குவிதிகள், நிதி அமைச்சின் ஒதுக்கீட்டு சட்ட கட்டளை, சிறப்புரிமைகள் மீறல் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், “கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் பொன்னாவெளி என்ற கிராமம் புராதன பின்னணியை கொண்டுள்ளது. 3 ஆயிரம் ஆண்டுகாலமாக தமிழர்கள் இந்த கிராமத்தில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் வந்தேறு குடிகள் அல்ல இந்த கிராமத்தில் தோன்றிய குடிகள்” என்று குறிப்பிட்டார்.

டோக்கியோ சிமெந்து நிறுவனத்துக்காக இந்த கிராம பகுதியில் இருக்கும் முருகை கற்பாறைகளை ஆழமாக அகழ்ந்து எடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் பல சிறப்பம்சங்களை கொண்டுள்ள பொன்னாவெளி கிராமம் இலங்கை வரைப்படத்தில் இருந்து காணாமல் ஆக்கப்படவுள்ளது என்றும் எம்.பி குறிப்பிட்டார்.

கனிய வளம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதாக குறிப்பிட்டுக் கொண்டு தமிழர்களின் பூர்வீக இடங்கள் அபகரிக்கப்படுகின்றன எனவும் கடல் வளங்களை அகழ்வதால் கடல்நீர் பொன்னாவெளி கிராமத்திற்குள் உட்புகுந்து முழு கிராமத்தையும் அழிக்கும் அபாயம் காணப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

## இலங்கைக்கே முதல் பரிசு

நிதி அமைச்சின் ஒதுக்கீட்டு சட்ட கட்டளை, சிறப்புரிமைகள் மீறல் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நெடுந்தீவு பகுதியில் வலுக்கட்டாயமான முறையில் சிங்கள குடியேற்றங்கள் அமைக்கப்படுகின்றன என்றும் மறுபுறம் சிங்கள மக்கள் வாழாத நாவற்குழி பகுதியில் பௌத்த விகாரையை முன்னாள் இராணுவ தளபதி சவேந்திர சில்வா திறந்து வைக்கிறார் மக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்துகிறார்கள் என்றும் குறிப்பிட்டார்.

தமிழ்களின் தொன்மையை பறைசாற்றும் குருந்தூர் மலை, வெடுக்குநாறி ஆகிய வரலாற்று சிறப்புமிக்க தலங்களில் புத்தர் தோன்றியுள்ளார் எனவும் இந்த நாடு எதை நோக்கிச் செல்கிறது? யுத்தம் முடிவடைந்த பின்னரும் எமது உறவுகள் நிம்மதியாக வாழ முடியாமல் தொடர்ந்து உரிமைகளுக்காக போராடுகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

தமிழ்களின் காணிகள் இன்றும் படையினர் கைவசம் உள்ளன எனவும் சொந்த நிலங்களை படையினரிடம் விட்டுக் கொடுத்து விட்டு தமிழர்கள் வீதியில் நிற்கிறார்கள் என்றும் தெரிவித்த அவர், அவரவர் உரிமைகளை அவரவருக்கு வழங்குவதை ஏன் தடுக்கின்றீர்கள்? என்றும் கேள்வியெழுப்பினார்.

அற்ப சொற்ப அதிகாரங்களை கொண்டிருந்த மாகாண சபை முறைமை முழுமையாக இல்லாதொழிந்துள்ளது. தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அரசியல் உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்படுகிறது என்றார்.

யுத்த காலத்தில் ஆயுதம் வழங்கிய அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தற்போது ஏன் தமிழர்களின் அடிப்படை உரிமைகளுக்கு குரல் கொடுப்பதில்லை? என்றும் கேள்வியெழுப்பினார்.

## 112 வாக்குகளால் ‘ஆங்கிலம்’ தோற்றது

பிக்கள் எதிர்ப்பை வெளியிட்டதை அடுத்து இலத்திரனியல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இந்த வர்த்தமானிக்கு எதிராக 113 பேர் எதிராக வாக்களித்த நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பி.யான சந்திம வீரக்கொடி மட்டும் ஆங்கில மொழியில் பரீட்சை எழுத வேண்டும் என்று ஆதரவாக வாக்களித்தார்.

சட்டக்கல்வி பேரவையினால் ஆக்கப்பட்டு, 2020 டிசெம்பர் 30ஆம் திகதி 2208/13ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.10ஆம் திகதி சமர்க்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக. என்ற பிரேரணையை சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த சபைக்கு சமர்ப்பித்தபோது, அதற்கு சபை இணக்கமா என்று சபாநாயகர் வினவினார்.

அதற்கு சபையில் இருந்த அரச , எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததை தொடர்ந்து சபாநாயகர் குறித்த வர்த்தமானி அறிவிப்புக்காக வாக்கெடுப்புக்கு செல்லுமாறு உத்தரவிட்டார். அதனைத்தொடர்ந்து வாக்கெடுப்புக்கான கோரம் மணி ஒலிக்கவிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இலத்திரனியல் முறையில் இடம்பெற்ற வாக்களிப்பில் குறித்த வர்த்தமானி அறிவிப்புக்குஎதிராக 113 வாக்குகள் அளிக்கப்பட்டன. ஆதரவு தெரிவித்து 1 வாக்கு அளிக்கப்பட்டது.

அதற்கமைய, 2020 டிசெம்பர் 30ஆம் திகதி 2208/13ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகை, 112 மேலதிக வாக்குகளால் நிராகரிக்கப்பட்டதாக சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

## ஐஎம்எப் கடன் குறித்து வெட்கப்பட வேண்டும்

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (21) இடம்பெற்ற மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் பெற்றோலிய வளங்கள் சட்ட ஒழுங்குவிதிகள், நிதி அமைச்சின் ஒதுக்கீட்டு சட்ட கட்டளை, சிறப்புரிமைகள் மீறல் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐஎம்எப் கடன் உதவி வழங்குவது தொடர்பில் அரசாங்கத்தில் உள்ளவர்கள் உட்சாகமாக இருப்பதாகவும் இவ்வாறான கடன் உதவியை பெறுவது தொடர்பில் உண்மையில் வெட்கமடைய வேண்டும் என்று குறிப்பிட்டார்.

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்கும் போதும் டொலர்களை காட்டி அன்று உற்சாகமாக கூறியதைப் போன்று இப்போது இந்த கடன் வரும் போதும் பேசுகின்றனர் என்று குறிப்பிட்ட அவர், நாட்டை கீழே தள்ளி கடன் பெறுவதற்கு பொருளாதாரத்தை சீர்குலைத்தவர்கள் வெட்கப்பட வேண்டும் என்றார்.

ஐஎம்எப்பின் கடன் பொறிக்குள் தற்போது சிக்கியுள்ளோம் என்றும் நாடு இன்னும் ஏற்றுமதி பொருளாதாரத்தில் முன்னேறவில்லை என்றும் தெரிவித்த அவர், இதனால் இந்த கடன் உதவி இது சிறியளவிலான ஒட்டு மாத்திரமே என்று சுட்டிக்காட்டினார்.

## புலஸ்தினிக்கு உதவி செய்த பொலிஸ் அதிகாரிக்கு பிணை

நாகூர்த்தம்பி அபூபக்கர் என்ற குறித்த பொறுப்பதிகாரி, புலஸ்தினி மகேந்திரன் தொடர்பான தகவலைத் தெரிந்தும் அதனை மறைத்தமை தொடர்பிலும் தனது வாகனத்தில் ஏற்றி அவரை நாட்டை விட்டு தப்பிச் செல்வதற்கு உடந்தையாக இருந்த குற்றத்திற்காகவும் கைது செய்யப்பட்டிருந்தார்.

2020ஆம் ஆண்டு ஜூலை 13ஆம் திகதி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 9 மாதங்கள் தடுப்புக்காவில் வைக்கப்பட்டு 2021 ஏப்ரல் 8ஆம் திகதி கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டிருந்தார்.

தான் செய்யாத குற்றத்துக்காக கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளமை தனது அடிப்படை உரிமையை மீறியுள்ளதாக தெரிவித்து 2021 ஜூன் மாதம் 29ஆம் திகதி தனது சட்டத்தரணியான ஏ. எல். ஆஸாதினூடாக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை வழக்கொன்றை பொலிஸ் பொறுப்பதிகாரி தாக்கல் செய்திருந்தார்.

## இராஜதந்திர நகர்வுகளை கையாண்டு அங்கிகாரம்

எதிரணிகளின் அரசியல் விமர்சனங்கள் மற்றும் போராட்டங்களுக்கு மத்தியிலும், சர்வதேச நாணய நிதியத்துடனான கொடுக்கல் வாங்கலை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு சிறந்த தலைமைத்துவத்தை வழங்கிய ஜனாதிபதிக்கு நன்றிகள் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு கடன் வசதி வழங்குவது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு அனுமதி வழங்கியமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,” வங்குரோத்து நிலையை அடைந்த எமது நாட்டுக்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதைவிட வேறுவழி இருக்கவில்லை. அதனால்தான் பொருளாதார மறுசீரமைப்புகள்கூட செய்யப்பட்டன.

இதற்கு முன்னரும் 16 தடவைகள் இலங்கை சர்வதேச நாணய நிதியத்தை நாடியுள்ளது. எனினும், வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. இதனால் இம்முறை கடனுக்கான அனுமதியை பெறுவது பெரும் சவாலாக அமைந்தது என்றார்.



# "உள்ளே தீர்ப்போம் வெளியே வேண்டோம்"

உடகங்களுடன் பிரச்சினைகள் இருப்பின் அதனை பாராளுமன்றத்துக்கு உள்ளேயே தீர்த்துக்கொள்வோம் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதனை நீதிமன்றம் வரை கொண்டு செல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பெற்றோலிய வளங்கள் சட்ட ஒழுங்குவிதிகள், கட்டளை தொடர்பான விவாதத்தின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் என்னை ஊடகங்கள் திட்டமிட்டு விமர்சித்தன. எம். பிக்கள் தொடர்பில் பொய்யான செய்திகளையும் வெளியிட்டன. தவறான வகையில் தனிப்பட்ட ரீதியில் விமர்சிக்கப்பட்டது. நான் 19 ஆவது திருத்தத்தின் ஊடாக ஊடக சுதந்திரத்தை முழுமையாக வழங்கியிருந்தேன். என்னை விமர்சித்த போதும் நான் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் குறித்த நிகழ்ச்சி தொடர்பான விடயத்தை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லாது இங்கேயே தீர்த்துக்கொள்வோம் என்றார்.



# ரோயல் தலைவனும் பூச்சிய ஜனாதிபதியும்



கிரிக்கெட் தொடரில் ரோயல் கல்லாரி வெற்றியடைந்த போது அந்த அணியின் தலைவர் செய்ததை போன்று தானும் நாட்டுக்கு வெற்றியை ஏற்படுத்துவேன் என்று ஜனாதிபதி தெரிவித்தார். ஆனால் ரோயல் கல்லூரி தலைவர் சுற்றுப்போட்டியில் ஆயிரம் ஓட்டங்களை எடுத்து சிறப்பாக விளையாடியவர். ஆனால் ஜனாதிபதி அனைத்திலும் தோல்வியடைந்தவர் என்று எதிர்க்கட்சி சுயாதீன எம். பியான டிலான் பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பெற்றோலிய வளங்கள் சட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல்களில் தோல்வியடைந்திருந்தாலும் சட்டவாக்கம், நிறைவேற்றுத்துறை, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளையும் ஆட்சி செய்கின்றார். உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளை அவர் ஆளுநர்கள் மற்றும் ஆணையாளர்கள் ஊடாக ஆட்சிபுரிகின்றார். மாற்றத்தை கோரியவர்களுக்கு இறுதியில் கிடைத்தது இதுவே என்றார்.

# சத்தியக்கடதாசியை பெற்று இணைக்க ஆலோசனை



உள்ளூராட்சி சபை தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்த சம்பளமற்ற விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று (21) கடுமையான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

இதற்கு பதிலளித்த மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க அமைச்சர் ஜானக வகும்புர தேர்தல் இடம்பெறும் வரை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட கூடாது என்ற சத்தியக்கடதாசியை பெற்று நிபந்தனைகளின் அடிப்படையில் சேவையில் இணைத்துக் கொள்வது தொடர்பில் சட்டமாதிபரிடம் ஆலோசனை கோரியுள்ளதாக தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (21) விமல் வீரவன்ச எம்.பி எழுப்பிய சம்பளமில்லாத விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்கள் தொடர்பிலான கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சபையில் ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை எழுப்பிய விமல்,

வேட்பு மனுத்தாக்கல் செய்து சம்பளமில்லாத விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்கள் தேர்தல் இழுபறியால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த பிரச்சினைக்கு அமைச்சரவை மட்டத்தில் ஒரு தீர்மானத்தை எடுக்க முடியும். நிதி நெருக்கடி என்று குறிப்பிட்டுக் கொண்டு தேர்தல் பணிகளை முன்னெடுக்க அரசாங்கம் நிதி விடுவிக்காமல் இருப்பதால் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிச்சயமற்ற நிலையில் உள்ளது என்றார்.

இதற்கு பதிலளித்த மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சர் சானக வகும்பர சம்பளமில்லாத விடுமுறையில் உள்ள அரசசேவையாளர்கள் தொடர்பில் உரிய தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை

> **"காலப்பகுதியில் வேட்பு மனுத்தாக்கல் செய்து சம்பளமில்லாத விடுமுறையில் இருந்த அரச சேவையாளர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டது, ஆகவே சம்பளமில்லாத விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்களுக்கு சம்பளம் வழங்குவது பிரச்சினைக்குரியதல்ல**

மேற்கொண்டுள்ளோம். சம்பளமில்லாத விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்களுக்கு அமைச்சரவை ஊடாக நிவாரண கொடுப்பனவு வழங்க முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது என்றார்.

இதனையடுத்து எழுந்த ஐக்கிய மக்கள் சக்தி .எம் .பி. ரஞ்சித் மத்தும பண்டார, ஒட்டுமொத்த வேட்பாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள், சம்பளமில்லாத விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்களுக்கு சம்பளமும் இல்லை, சேவையும் இல்லை ஆகவே மார்ச் மாதம் 9 ஆம் திகதி என்ற வரையறைக்குள் அவர்களுக்கு சம்பளம் வழங்க அரசாங்கம் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்றார்.

இதன்போது எழுந்த எஸ்.பி.திஸாநாயக்க எம்.பி , 1987 ஆம் ஆண்டு தேர்தலுக்கு வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டு 1992 ஆம் ஆண்டு வரை குறித்த தேர்தல் இடம்பெறவில்லை. அதுவரையான காலப்பகுதியில் வேட்பு மனுத்தாக்கல் செய்து சம்பளமில்லாத விடுமுறையில் இருந்த அரச சேவையாளர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டது, ஆகவே சம்பளமில்லாத விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்களுக்கு சம்பளம் வழங்குவது பிரச்சினைக்குரியதல்ல என்றார்.

# இடமாற்ற கடிதங்கள் தபாலிடப்பட்டுள்ளன



ஆசிரியர்களின் இடமாற்றங்கள் எதுவும் நிறுத்தப்படவில்லை. இடமாற்றங்கள் தீர்மானித்தபடியே வழங்கப்படுகின்றன. நேற்றும் இன்றும் ஒரு தொகை ஆசிரியர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

க.பொ.த. சாதாரண தர பரீட்சையுடன் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அந்த ஆசிரியர்கள் மட்டும் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இடமாற்றத்தை பின்னர் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விசேட கூற்றொன்றை முன்வைத்து ஆசிரியர் இடமாற்ற சபை களைப்பு, ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்த கல்வி அமைச்சர் மேலும் கூறுகையில்,

10 வருடங்களுக்கு மேல் ஒரே பாடசாலையில் உள்ளவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுவதை அடிப்படையாக வைத்தே நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 2017 ஆம் ஆண்டில் இருந்தே இந்த இடமாற்றம் வழங்கப்பட்டு வருகிறது. எனினும் கடந்த மூன்று வருடங்களில் கொரோனா சூழ்நிலை காரணமாக இது இடம்பெறாததால் அனைத்தையும் ஒன்றாக தற்போது எடுத்துள்ளோம். அந்த வகையில் மொத்தமாக 8,893 இடமாற்றங்களுக்கான அனுமதி இடமாற்ற சபை மூலம் கிடைத்துள்ளது.

இதில் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் 681 பேர் அடங்குகி ன்றனர். அந்த வகையில் 388 இடமாற்ற கடிதங்கள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன.. மீதமானவை உடனடியாகவே தபாலில் அனுப்பப்படும். சுமார் ஆயிரம் ஆசிரியர்கள் பத்து வருடங்களுக்கு மேல் ஒரே இடத்தில் சேவையாற்றி கட்டாய இட மாற்றத்திற்காக இருப்பவர்கள் என்றார்.

# சூத்திரத்தில் நிவாரணம் கிடைக்கும் சாத்தியம்




ஏப்ரல் மாதத்தில் மேற்கொள்ளவிருக்கும் விலைசூத்திர மறுசீரமைப்பின் போது, மக்கள் அனுபவிக்கக்கூடிய பெருமளவிலான நிவாரணத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பெற்றோலிய வளங்கள் சட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மின்சார கட்டணம் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், டிசெம்பர் மாதமளவில் அதற்கான நிவாரணத்தை வழங்க கூடியதாக இருக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைத்துள்ளது. இதனை தொடர்ந்து நாணயக் கடிதங்களை இனி திறக்க முடியும். இதன்படி குறைந்த விலையில் விநியோகங்களை மேற்கொள்ள முடியுமாக இருக்கும். நாங்கள் எரிபொருள் விலை சூத்திரத்தை செயற்படுத்துகின்றோம். ஒவ்வொரு மாதமும் அதனை செய்கின்றோம் என்றார்.

இப்போது மசகு எண்ணெய் விலை குறைவடைகின்றது. ரூபாய் பலமடைகின்றது. இதன்படி ஏப்ரல் மாதமளவில் திருத்தத்தின் போது மக்களுக்கு அனுபவிக்கக் கூடிய நிவாரணத்தை வழங்க நடவடிக்கை நடவடிக்கை எடுப்போம் என்றார்.

# ஒருபோதும் அனுமதிக்க முடியாது

நீதிமன்றம், சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு, ஊடகங்களை பாராளுமன்றத்தின் சிறப்புரிமையை பயன்படுத்தி ஒடுக்க முயற்சிக்கப்படுவதாகவும், இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும் எதிர்க்கட்சி பிரதம கொரடாவான ஐக்கிய மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை பெற்றோலிய வளங்கள் சட்ட ஒழுங்குவிதிகள் கட்டளை தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் சிறப்புரிமையை பயன்படுத்தி நீதிமன்றம், சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு, ஊடகங்களை ஒடுக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 21 ஆம் திருத்தத்தில் நாங்கள் ஏதேனும் வெற்றியை பெற்றுள்ளோம். அதனூடாக பெற்ற வெற்றியின் ஊடாக நீதிமன்றம் உள்ளிட்ட உயர்நிறுவனங்களின் சுயாதீனத்துவம் பாதுகாக்கப்பட்டது. ஆனால் இப்போது பாராளுமன்றத்தின் சிறப்புரிமையை பயன்படுத்தி அதனை இல்லாது செய்ய முயற்சிக்கின்றனர்.

உயர்நீதிமன்றத்தின் நீதியரசர்களை, அவர்கள் வழங்கிய தீர்ப்பொன்று தொடர்பில் சிறப்புரிமை குழுவுக்கு அழைக்க முயற்சிக்கப்படுகின்றது. எப்படி தீர்ப்பின் மூலம் எம்பிக்களின் சிறப்புரிமை பாதிக்கப்படும். என்றார்.



பிரதேச செயலக பிரிவுகள் ரீதியில்

# நல்லிணக்கம், சமாதானத்துக்கு தடங்கல்கள்

## அம்பாறை மாவட்ட செயலகத்தில் மகஜர் கையளிப்பு

இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் சமாதானத்தை வலியுறுத்தி இளைஞர் சமாதான பேரணி நேற்று முன்தினம் (20) அம்பாறை நகரில் நடைபெற்றது.

மாவட்ட சமாதான இளைஞர் குழுவால் முன்னெடுக்கப்பட்ட பேரணி, அம்பாறை மணிக்கூட்டு கோபுர சந்தியில் இருந்து மாவட்ட செயலகம் வரை சென்றது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள 20 பிரதேச செயலக பிரிவுகளில் பிரதேச நல்லிணக்க குழுக்கள் அமைக்கப்பட்டு, பிரதேச ரீதியாக சமூக நல்லிணக்கம் சமாதானம், சமூக முரண்பாடுகள், அதிதீவிர போக்குகள் தொடர்பாக பயிற்சி நெறிகள் நடத்தப்பட்டு இக்குழுக்கள் மாவட்டத்தில் சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் செயற்பட்டு வருவதாக, சமாதானமும் சமூக மேம்பாட்டு அமைப்பின் இளைஞர் வலுவூட்டல் திட்டத்தில் இணைப்பாளர் ஐ. சுதாவாசன் தெரிவித்தார்.

பிரதேச செயலக ரீதியாக முன்னெடுக்கப்படும் இன நல்லிணக்கம், சமாதானம், அதிதீவரவாத போக்கை இல்லாமல் செய்தல் போன்ற வேலைத் திட்டங்களுக்கு ஏற்படக் கூடிய தடங்கல்கள் தொடர்பான விவரங்கள் அடங்கிய மகஜர், அம்பாறை மாவட்ட உதவி செயலாளர் விமலசேன செனவிரட்னவிடம் மாவட்ட இளைஞர் குழுவால் கையளிக்கப்பட்டது.







# முகமாலையில் விவசாயம்

■ மு.தமிழ்ச்செல்வன்

கடும் யுத்தம் நிகழ்ந்த முன்னரங்க பகுதியாக காணப்பட்ட முகமாலை பகுதியில் கண்ணிவெடி அகற்றப்பட்டு பாதுகாப்பான நிலமாக பொது மக்களிடம் கையளிக்கப்பட்ட பிரதேசங்களில் பாரியளவிலான விவசாய நடவடிக்கைகளில் பொது மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

முந்திரி தோட்டங்கள், தென்னை செய்கை உள்ளிட்ட விவசாய நடவடிக்கைகளிலேயே மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

டாஸ் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் அமைப்பு முகமாலை மற்றும் மணலாறு பகுதிகளில் இதுவரை 357 இடங்களில் முழுமையாக கண்ணிவெடிக்களை அகற்றியுள்ளதோடு, 13 இடங்களில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர்.



ஜப்பான் நாட்டு பொது மக்களின் நிதியுதவியில் இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற வடக்கில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதன்மூலம் கண்ணிவெடி மற்றும் அபாயகரமான வெடிக்காத வெடிப்பொருட்கள் அகற்றப்பட்ட பிரதேசங்கள் பொது மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இப் பிரதேசங்களில் பொது மக்கள் அச்சமின்ற வாழவும், விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஆரம்பித்துள்ளனர்.



## குடத்தனை விபத்தில் ஒருவர் பலி

■ செந்தூரன் பிரதீபன்

பருத்தித்துறை - தாளையடி வீதியில், வடமராட்சி கிழக்கு குடத்தனைச் சந்தியில் மோட்டார் சைக்கிளும், லொறியும் நேற்று (21) நேருக்கு நேர் மோதியதில், ஸ்தலத்திலேயே ஒருவர் பலியானதுடன், ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



விசேட தேவையுடைய பிள்ளைகளை கொண்ட குடும்பத்தின்

## வாழ்வாதாரத்தை உடைத்தெறிந்த காட்டு யானை

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மானுருவி பகுதியில், விசேட தேவையுடைய பிள்ளைகள் இருவரைக் கொண்ட குடுப்பத்துக்கு வாழ்வாதாரமாக வழங்கப்பட்ட அரைக்கும் ஆலைக்குள் காட்டு யானை புகுந்து துவம்சம் செய்துள்ளது.

அரைக்கும் ஆலைக்குள் ஞாயிற்றுக்கிழமை (19) இரவு புகுந்த காட்டுயானை அரைக்கும் ஆலையின் ஒருபகுதி சுவரை உடைத்து வீழ்ந்தியுள்ளதுடன் மா அரைக்கும் இயந்திரம், தூள் அரைக்கும் இயந்திரம், மின்சார இணைப்புகளைச் சேதப்படுத்தியுள்ளது.

இதனால் சுமார் 500,000 ரூபாய் பெறுமதியான சொத்துகளுக்கு சேதம் விளைவித்துள்ளதாக பாதிக்கப்பட்ட நபர் தெரிவித்துள்ளார்.





சிறுவர்களின் பாதுகாப்பு:

## கிராமங்கள் தோறும் விழிப்புணர்வு

மது, போதைப்பொருள் பாவனைகளின் தீங்குகளை வெளிப்படுத்தி, விழிப்புணர்வூட்டும் தெருநாடகமும் ‘போதைப்பொருள் பாவனை இல்லாத இளைஞர் சமுதாயத்தை உருவாக்குவோம்’ எனும் தொனிப்பொருளில் அமைந்த உறுதியுரை ஏற்றலும், கிராமங்கள் தோறும் முன்னெடுக்கப்படுவதாக அக்‌ஷன் யுனிற்றி லங்கா நிறுவனத்தின் அலுவலர் அநுலா அன்ரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, வவுணதீவுப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள காஞ்சிரங்குடா, பன்சேனை ஆகிய கிராமங்களில், தொடுவானம் இளைஞர் கலைக் கழகத்தால் விழிப்புணர்வு தெருநாடகம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் உறுதியுரை ஏற்றலும் விழிப்புணர்வூட்டலும் நேற்று (21) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வில், அக்‌ஷன் யுனிற்றி லங்கா நிறுவனத்தின் கண்காணிப்பு மற்றும் மீளாய்வு இணைப்பாளர் எஸ். ஜோன்சன், இணைப்பாளர் ரீ.ஆர் மார்ஷல், அலுவலர்களான ஜி. நிதுஷ்காந்த், ஏ. அபிலாஷினி உட்பட இளைஞர் கழகத் தலைவர்களான எஸ். பிரவீனா, ரீ. சஞ்சீவ், கே. டிலோஜினி உட்பட கிராம மக்களும் செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர்.

ஏ.எச்.ஏ ஹுஸைன்

## ‘என் சிறகில் சிக்கிய வானம்’ நூல் வெளியீடு



■ எம்.எஸ்.எம் ஸாகிர்

மரீனா இல்யாஸ் ஷாபி எழுதிய ‘என் சிறகில் சிக்கிய வானம்’ நூல் வெளியீட்டு விழா சனிக்கிழமை (11) சாய்ந்தமருது கமு/மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

SRI LANKA PEN CLUB ஆற்றலுள்ள பெண்களின் அமைப்பின் ஏற்பாட்டில், அமைப்பின் தலைவி சம்மாந்துறை மஷூறா ஆசிரியை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், ஒலிஒளிபரப்பு சிரேஷ்ட ஊடகவியலாளர் பா ஹாஷிம் பா அலவி அஷ்ஷெய்க் இர்பான் மௌலானா முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டார். இந்நிகழ்வில், கவிஞர் மன்சூர் ஏ காதிர், பேஜஸ் அறிவு மையத்தின் பணிப்பாளர் சிராஜ் மஷூர் ஆகியோர் நூல் உரைகளை நிகழ்த்தினர்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட நூலகர் கலாநிதி மஸ்ரூபா முஹம்மட், அம்பாறை தேசிய நீர்வழங்கல் சபையின் பிரதம பொறியியலாளர் இஸ்மாயீல் தம்பிலெப்பை ஆகியோர் விசேட அதிதிகளாகவும் எஸ்.யூ கமர்ஜான் பீவி, திருகோணமலை ஸாஹிறா கல்லூரி பிரதி அதிபர் மர்ளியா சக்காப், கவிஞர் விஜிலி மூஸா, ஹைறாத் வித்தியாலய அதிபர் அஜ்றா கலீல்தீன், ஜமாலியா வித்தியாலய அதிபர் மஹீஸா பானு ஜெஸூர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.



மன்னார் தீவுப் பகுதியில் 2ம் கட்ட காற்றாலை மின்சாரம்:

## அறிக்கையில் பாதிப்பு குறித்த உண்மை இல்லை

■ றொசேரியன் லெம்பேட்

மன்னார் தீவுப் பகுதியில் இரண்டாம் கட்ட காற்றாலை மின்சாரம் அமைத்தல் தொடர்பில் தீவுப் பகுதி மக்களின் எதிர்ப்பு நடவடிக்கை அதிகரித்து வரும் நிலையில் காற்றாலை மின்சாரம் தொடர்பில் அரசாங்கத்தால் சூழலியல் தாக்கல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கை தொடர்பில் பொது அமைப்பு, சமூக செயற்பாட்டாளர்கள் அதிருப்தி அடைந்துள்ள நிலையில், குறித்த அறிக்கை தொடர்பில் மக்களின் பாதிப்பு குறித்த உண்மை தன்மை இல்லை என்பதே மக்கள் பிரதிநிதிகளின் கருத்தாக அமைந்துள்ளது.

குறித்த காற்றாலை மின்சாரம், மன்னார் தீவுப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்துக்குகு பல்வேறு தாக்கத்தை செலுத்தும் என்பதை நோக்கமாகக் கொண்டு தீவுப் பகுதிக்குள் நிறுவுவதை முற்றாக நிறுத்தும்படி கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

குறித்த நடவடிக்கை தொடர்பில் ஆராயும் நோக்கோடு ‘சூழலியல் நீதிக்கான மையம்’ பிரதிநிதிகள் அடங்கிய குழு கொழும்பிலிருந்து மன்னாருக்குச் சென்று நேற்று முன்தினம் காலை சுமார் 9 மணி அளவில் மன்னார் மாவட்ட மற்றும் மன்னார் தீவு பகுதி மக்கள் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டது.



இரணைமடுக் குளத்தின் கீழ்

## சிறுபோகத்தில் 13,000 ஏக்கரில் நெற்செய்கை

■ சுப்ரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்பாசனக் குளமான இரணைமடுக் குளத்தின் கீழ் இவ்வாண்டு சிறுபோகத்தில் 13,000 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் சுமார் 36 அடி நீர் கொள்ளளவை கொண்ட பாரிய நீர்ப்பாசனக் குளமான இரணைமடுக் குளத்தில் தற்போது 30அடி தண்ணீர் மாத்திரமே அதாவது 81,164 ஏக்கர் அடி தண்ணீர் உள்ளது.

இந்த நிலையில் திருவையாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் மாவட்டத்துக்கான குடிநீர் விநியோகம், நன்னீர் மீன்பிடி, வெப்பத்தால் ஆவியாகுதல் என்பவை தவிர மீதமாகவுள்ள 59,000 ஏக்கர் கன அடி தண்ணீரை மாத்திரமே சிறு போக விவசாயத்துக்கு பயன்படுத்த முடியும் என்பதால் குறித்த நீர் கொள்ளளவை வைத்து இவ்வாண்டு 13,000 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையும், 1,500 ஏக்கர் மேட்டுநிலச் செய்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது

இது தொடர்பிலான பயிர்ச் செய்கை கூட்டம், கிளிநொச்சி, கோவிந்தன் கடை சந்தியில் அமைந்துள்ள திட்ட முகாமைத்துவ குழு அலுவலகத்தில் மாவட்ட பயிர்செய்கை குழுவின் தலைவரும் மாவட்ட அரச அதிபருமான ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் சிறுபோக செய்கையை முன்னெடுப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் துறைசார் திணைக்களங்களின் தலைவர்கள் ஒத்துழைப்புகளை வழங்கி, சிறுபோக செய்கையை வெற்றிகரமாக முன்னெடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் உரிய காலத்தில் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதுடன் கால்நடைக் கட்டுப்பாடு, நீர்முகாமைத்துவம், பயிர் காப்புறுதி, உரம் உள்ளிட்ட விவசாய உள்ளீடுககளின் விநியோகம் என்பன தொடர்பாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பாரம்பரிய வைத்தியர்களுக்கான செயலமர்வு

■ அபு அலா



சுகாதார அமைச்சின் சுதேச வைத்தியப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட, பாரம்பரிய வைத்தியர்களுக்கான ஐந்து நாள் பயிற்சி செயலமர்வின் ஆரம்பநாள் நிகழ்வு நேற்று முன்தினம் (20) மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு சித்த தள ஆயுர்வேத வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

சுதேச வைத்தியப் பிரிவின் தலைவர் பி. தயாநந்தன் தலைமையில் ஆரம்பமான இச்செயலமர்வில், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ. ஸ்ரீதர், கல்முனை பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளரும் வைத்திய அத்தியட்சகருமான வைத்தியர் எம்.ஏ நபீல், அமைச்சின் சுதேச வைத்தியப் பிரிவின் வைத்தியர் சி. சிவகுமார், கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள திட்டமிடல் பிரிவு வைத்தியர் எஸ். சதீஸ் உள்ளிட்ட வைத்தியர்களும், கிழக்கு மாகாண பாரம்பரிய வைத்தியர்கள், அமைச்சின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத பாரம்பரிய வைத்தியர்களின் அறிவுத்திறன்களை மேம்படுத்தும் நோக்கிலும், அவர்களின் வைத்திய முறைகளை எவ்வாறு கடைப்பிடித்துச் செல்லல்வேண்டும் என்ற பயிற்சிகளும் வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# திறன் வகுப்பறை திறப்புவைப்பு

■ நவி






கம்பளை கல்வி வலயத்துக்கு உட்பட்ட வெஸ்டோல் தோட்ட தமிழ் பாடசாலைக்கு இந்தியா அவனியூ முதலீட்டு முகாமைத்துவம் தொண்டு நிறுவனம் மற்றும் வன்னி ஹோப் நிறுவனம் ஆகியவற்றின் நிதி அனுசரணையில், திறன் வகுப்பறை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வன்னி ஹோப் அவுஸ்திரேலியா நிறுவனத்தின் அனுசரணையில் கிராமப்புற மற்றும் தோட்டபுற பாடசாலைகளுக்கு திறன் வகுப்பறைகள் வழங்கும் விசேட செயற்றிட்டத்தின் கீழ் இந்தத் திறன் வகுப்பு திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், ஹோப் நிறுவனத்தின் பணிப்பாளர் ரஞ்சன் சிவஞானசுந்தரம், அவரது பாரியார் ரேனுகா சிவஞான சுந்தரம், பணிப்பாளர் வைத்தியர் மாலதி வரன், நல்லையா கல்வி நிதியத்தின் பணிப்பாளர் பாலச்சந்திரன் நல்லையா, வன்னி ஹோப் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் என். முரளிதரன், கண்டி மாவட்ட இணைப்பாளர் பெ.யோகேஸ்வரன், கம்பளை கல்வி வலய கோட்ட கல்வி பணிப்பாளர் உமேஸ்நாதன் மற்றும் வன்னி ஹோப் நிறுவன உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## லொறி – மோட்டார் சைக்கிள்

# விபத்தில் இளைஞன் பலி

■ நடராஜா மலர்வேந்தன், ராமு தனராஜா



பசறை - மொனராகல வீதியில், தொழும்புவத்த பகுதியில் நேற்று (21) இடம்பெற்ற லொறி - மோட்டார் சைக்கிள் விபத்தில் மீதும்பிட்டிய தோட்டத்தை வதிவிடமாக கொண்ட நிரோஷன் (வயது 19) பலியாகியுள்ளார் என பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

இளைஞன் மற்றும் அவரது தந்தை பயணித்த மோட்டார் சைக்கிள், படல்கும்புர - தொழும்புவத்த வீதியில் வைத்து எதிர்திசையில் இருந்து வந்த லொறியுடன் மோதுண்டு, இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது மகன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் மோட்டார் சைக்கிளை செலுத்திய தந்தை பலத்த காயங்களுடன் பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றார்.

லொறியின் சாரதியை கைது செய்துள்ள பசறை பொலிஸார், விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பசறை பொது வைத்தியசாலையில் இளைஞனின் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

# போகம்பர சிறையில் உயிரை மாய்த்த கைதி

■ ஷேன் செனவிரத்ன

கண்டி, போகம்பர சிறைச்சாலையில் ஹெரோய்ன் போதைப்பொருள் குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நபர், தனது உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் என பல்லேகல பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (20) இரவு 10 மணியளவில் அவர் சிறைச்சாலையில் தூக்கிட்டு இவ்வாறு தனது உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தம்பாவெல, குருதெனிய பிரதேசத்தில் தினேஷ் பிரியதர்ஷன (வயது 27) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம், தொடர்பான மேலதிக விசாரணைகளை பல்லேகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தோட்டத் தொழிலாளர் மையத்தின் தலைமையில்

# கறுப்பு போராட்டம்

### பெருந்தோட்ட மக்களுக்கான அடிப்படை வசதிகளை வழங்குமாறு கோரிக்கை

■ பி.கேதீஸ்



பெருந்தோட்ட மக்களின் கோரிக்கைகளை முழுமையாக நிறைவேற்றக் கோரி, பெருந்தோட்டங்கள் முழுவதும் இன்று புதன்கிழமை (22) கறுப்புப் போராட்ட தினமாக அனுஷ்டிக்கப்படுவதாக தோட்டத் தொழிலாளர் மையம் தெரிவித்துள்ளது.

“பெருந்தோட்ட மக்களுக்கு காணி-வீட்டுரிமை வழங்குங்கள்; மக்களை ஏமாற்றும் பொய் பிரசாரங்கள் வேண்டாம்” என்ற தலைப்பில், இந்தக் கறுப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

“பெருந்தோட்ட மக்கள், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து இன்றுடன் (22) 200 வருடங்கள் பூர்த்தியாகின்றன. எனினும், அவர்களுக்கான அடிப்படை தேவைகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை ” என குறித்த மையம் சுட்டிக்காட்டுகிறது.

அத்துடன், “தோட்டத் தொழிலாளர்கள் இந்த நாட்டுக்கு வந்து 200 வருடங்கள் கடந்துள்ள போதிலும், அதிகளவான மக்கள் இன்னும் சிறிய லயன் அறைகளிலேயே வாழ்கின்றார்கள். அவர்களுக்கு குறைந்தபட்ச மாத சம்பளத்தையாவது வழங்க வேண்டும். இந்த நாட்டின் அரசாங்கங்கள், பெருந்தோட்ட மக்களுக்கு தேவையானவற்றை பூர்த்தி செய்யவில்லை” என தொழிலாளர் மையம் கூறுகிறது.

தோட்டத் தொழிலாளர்கள் தமது சொந்த மொழியில் பேசக்கூடிய வகையில், அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் பல இடங்களில் இல்லை எனவும் தோட்டத் தொழிலாளர்கள் என்ற வகையில் அவர்களுக்கு வாக்குரிமை மாத்திரமே இருப்பதாகவும் தோட்டத் தொழிலாளர் மையம் சாடுகின்றது.



# கடன் கிடைத்த ஆரவாரம்

இலங்கைக்கு கடன் வசதி வழங்க சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு அனுமதி வழங்கியமையை அடுத்து, மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் முகமாக, ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்கள் ஹட்டன் நகரில் நேற்று (21) பட்டாசுகளை கொளுத்தி பெரும் ஆரவாரமாக இருந்தனர்.

(படங்கள்: ரஞ்சித் ராஜபக்ஷ)

## நாட்டை கட்டியெழுப்பக் கூடிய

# தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே

■ நீலமேகம் பிரசாந்த்



ரணில் விக்கிரமசிங்க ஒருவராலேயே நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் சச்சுதானந்தன் தெரிவித்தார்.

“நாடு பல இன்னல்களுக்கு முகங்கொடுத்து, உலக நாடுகளின் அனுதாபத்துக்கு உட்பட்டிருந்த நிலையில், மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வர முயற்சிகள் எடுக்கப்பட்டன. தற்போது சர்வதேச நாணய நிதியம் 7 பில்லியன் ரூபாய் நிதி வழங்க அனுமதி வழங்கியுள்ளமை ரணிலின் அனுபவம்மிக்க தலைமைத்துவத்துக்கு கிடைத்த வெற்றி” என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், “நாடு அதலபாதாளத்தை நோக்கிச் சென்றது. சில மாதங்களாக மக்கள் அல்லோலகல்லோலப்பட்ட வேளை ஜனாதிபதியாக பொறுப்பேற்று, மூழ்கும் கப்பலுக்கு நங்கூரம் போட்டு பாதுகாப்பது போல இந்நாட்டை மூழ்க விடாமல் தாங்கிப் பிடித்து, கொண்டிருக்கின்றார்.

“சர்வதேச நாணய நிதியம் நிதி வழங்க அனுமதி கிடைத்துள்ளமை நாட்டு மக்களுக்கு பெரும் மகிழ்ச்சியை அளித்துள்ளது. இனிவரும் காலங்களில் மக்கள் வழமை போல நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் வாழ வழி பிறக்கும்.

“ஆரம்பத்தில் விமர்ச்சிக்கப்பட்டு ஜனாதிபதியாக பதவியேற்றாலும் இன்று அவற்றை தவிடு பொடியாக்கி, நாட்டை அபிவிருத்திப் பாதையை நோக்கிக் கொண்டு செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் ஜனாதிபதி ரணில் தொடங்கி விட்டார்.

“இந்நாட்டை அபிவிருத்தி மிக்க நாடாக மாற்ற தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திரமே முடியும்” என இ.தொ.கா உப தலைவர் மேலும் தெரிவித்தார்.

## மஸ்கெலியாவில்

# 159ஆவது பொலிஸ் வீரர் தினம்

■ செ.தி.பெருமாள்



159ஆவது பொலிஸ் வீரர் தினம், ஹட்டன் பொலிஸ் பிரிவிலுள்ள அதிகாரி ஜயசிங்க தலைமையில், மஸ்கெலியா பொலிஸ் நிலைய விளையாட்டு திடலில் நேற்று (21) நடைபெற்றது.

இதன்போது, 1864ஆம் ஆண்டு, மாவனெல்ல பகுதியில் இரு சந்தேகநபர்களை கைதுசெய்ய முற்பட்ட போது, சந்தேக நபர் ஒருவரின் துப்பாக்கிச் சூட்டில் மரணித்த ஸ்பானிஷிக்கு நினைவு மரியாதை செலுத்தப்பட்டது.

மேலும், அங்கவீனமுற்ற வீரர் ஒருவருக்கு காலை உணவு ஊட்டும் நிகழ்வும் நடைபெற்றதுடன், யுத்தத்தில் பிள்ளையை இழந்த தாய் ஒருவரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



# கோரிக்கையை செவிமடுத்த ஜீவன்

■ டி.சந்ரு





புசல்லாவை, மெல்போர்ட் தோட்ட மக்களுக்கான குடிநீர் திட்டத்தை முழுமைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் உறுதியளித்தார்.

இதனையடுத்து, அமைச்சரின் ஆலோசனைக்கமைய, மெல்போர்ட் தோட்டத்துக்கு நேற்று முன்தினம் (20) களப் பயணம் மேற்கொண்டிருந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவர் செல்லமுத்து, தோட்ட தலைவர்கள் உட்பட மக்களுடன் கலந்துரையாடி, தகவல்களைப் பெற்றுக்கொண்டார்.

தமது தோட்டத்தில் உள்ள குடிநீர்த் திட்டத்தை முழுமைப்படுத்தி, தடையின்றி சுத்தமான நீர் கிடைப்பதற்கு வழியமைத்துக்கொடுக்குமாறும் கேட்டுக்கொண்டனர். சுமார் 650 குடும்பங்கள், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானிடம், ஊடகங்கள் வாயிலாக கோரிக்கை விடுத்திருந்தனர்.

இது தொடர்பில் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து, இ.தொ.காவின் உப தலைவர் செல்லமுத்துவை தொடர்புகொண்டு, தோட்டத்துக்கு நேரில் சென்று அறிக்கை பெற்றுகொள்ளுமாறு ஆலோசனை வழங்கினார்.

இதற்கமைய, அங்கு சென்றிருந்த செல்லமுத்து, இது சம்பந்தமாக அமைச்சருக்கு அறிக்கையொன்றை கையளிக்கவுள்ளார். அதன்பின்னர் குறுகிய காலப்பகுதிக்குள் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தமது கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக விரைந்து செயற்பட்டு, பிரதிநிதிகளை தமது தோட்டத்துக்கு அனுப்பியதற்காக அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு, மக்கள் நன்றிகளை தெரிவித்தனர்.

## இலங்கை பாடசாலை

# மாணவர்களுக்கு உணவு வழங்கல்

### அமெரிக்காவின் விசேட திட்டம்

■ சிவாணி ஸ்ரீ



**பாலம் திட்டம் இரத்தினபுரி, நுவரெலியா, பதுளை, மொனராகல, கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணாமலை ஆகிய மாவட்டங்களில் நடைமுறைபடுத்தப்பட உள்ளது**

அமெரிக்கா நாட்டின் விவசாயத் திணைக்களத்தின் பாலம் திட்டத்தின் மூலம் (SDA FOOD FOR EDUCATION PALAM PROJECT), இலங்கையில் உள்ள 95,000 பாடசாலை மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் விசேட திட்டம் நடைமுறைக்கு வருகின்றது.

இதற்கமைய, அமெரிக்க விவசாயத் திணைக்களத்தின் பாலம் திட்டத்தின் மூலம் இரத்தினபுரி மாவட்டத்தில் குருஆகார வித்தியாலயம், சங்கபால ஸ்ரீ குணரத்தன வித்தியாலயம என்பவற்றுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி ஷன்ங், நேற்று முன்தினம் (20) ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில், கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த, சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ உட்பட முக்கிய அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

பாலம் திட்டத்துக்காக 27.5 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டம், இரத்தினபுரி, நுவரெவியா, பதுளை, மொனராகல, கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணாமலை ஆகிய மாவட்டங்களில் நடைமுறைபடுத்தப்பட உள்ளது.

2020ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தில் இதுவரை 852 பாடசாலைகள் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஹட்டன் – பொகவந்தலாவ வீதி

# குழிகளை நிரப்புங்கள்

### மக்கள் அவதியை பாருங்கள்

■ செ.தி.பெருமாள்





கடந்த மூன்று ஆண்டுகளாக நோர்வூட் எரிபொருள் நிரப்பும் நிலையம் முதல் பொகவந்தலாவ நகரம் உள்ள பிரதான வீதி பாரியளவில் குன்றும் குழியுமாக உள்ளதால், அதைப் பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள், நோயாளிகள் மற்றும் கர்ப்பிணிகள் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதாக புகார் தெரிவிக்கின்றனர்.

மூன்று ஆண்டுகளுக்கு முன் இந்த வீதி அபிவிருத்தி செய்யும் பணி இடம்பெற்றது. எனினும், அந்த அபிவிருத்திப் பணி மிகவும் மந்தமாகவே இருந்தது.

தொடர்ந்து கொவிட் 19 அசாதாரண சூழ்நிலை காரணமாக வீதி செப்பனிடும் பணி இடைநடுவில் கைவிடப்பட்டது.

இதனால் அந்தப் பகுதியில் உள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அவசர சிகிச்சை பெற்றுக் கொள்ள அம்புலன்ஸ் மூலம் செல்ல முடியாத நிலையில் அந்தப் பிரதான வீதி உள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் இப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# தோள் கொடுத்திருக்கும் மக்களின் சுமைகளைக் குறைக்க வழிசமைக்கவும்

இவ்வாண்டு முதல் மூன்று மாதங்களுக்குள், மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள சுமைகளைக் கணக்கிடவே முடியாது. சாதாரண ஒருவர் தாங்கிக்கொள்ள முடியாதளவுக்கு பெரும் சுமைகளை ஒவ்வொரு குடிமகனும் தன்னுடைய தோளில் சுமந்து கொண்டு, ஒவ்வொரு நாளும் தள்ளாடித் தள்ளாடி நகர்ந்து சென்று கொண்டிருக்கின்றான். ‘ரொக்கெட்’ வேகத்தில் அதிகரிக்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் ஆமை வேகத்திலேயே குறைக்கப்பட்டன.

இவற்றுக்கெல்லாம் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளே காரணமாகுமென எதிர்க்கட்சியினர் விமர்சனம் செய்கின்றனர். இறக்குமதிக்கான கட்டுப்பாடு, மின்சாரக்கட்டண அதிகரிப்பு, புதிய வரிக்கொள்கை இவ்வாறு அடுக்கிக்கொண்டே போகலாம். அரசாங்கத்தால் சுமத்தப்பட்டிருக்கும் சுமையை, எதிர்த்து நாடளாவிய ரீதியில் தீப்பந்த போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு நான்கு வருடங்களுக்கு 2.9 பில்லியன் டொலர் கடன் கொடுப்பது தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில் 2022 செப்டெம்பர் முதலாம் திகதி செய்து கொள்ளப்பட்ட அதிகாரிகள் மட்ட இணக்கப்பாட்டுக்கு, அந்நிதியத்தின் நிறைவேற்றுச் சபை திங்கட்கிழமை (20) ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதையடுத்து ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்கள் ஆங்காங்கே பட்டாசு கொளுத்தி, மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்திருந்தனர்.

இன்னும் சிலர், எதிர்காலத்தை நினைத்து கவலை கொண்டுள்ளனர். ஏனெனில், பெற்ற கடனை எதிர்வரும் 4-10 வருடங்களுக்கு இடையில் செலுத்தி முடிக்கவேண்டும். அதற்காகவும், மக்கள் மீதுதான் சுமைகளை அரசாங்கம் சுமத்திவிடவும் கூடும்.

எனினும், சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் எவையும் மூடி மறைக்கப்படவில்லையென அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நேற்று (21) விசேட அறிவிப்பொன்றை விடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம், பாராளுமன்றத்தில் இன்று (22) சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில்,பாராளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை விடுத்து கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், அதிலிருக்கும் நிபந்தனைகள் எவை என்பதுடன், பல துறைகளையும் சார்ந்து 19 கேள்விகளைக் கேட்டிருந்தார்.

அக்கேள்விகளுக்கு உடனடியாக பதிலளிக்க முடியாதென மறுத்த ஆளும் கட்சியின் சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த, கேள்விகள் அதனைத்தும் வெவ்வேறு அமைச்சுகளுடன் தொடர்புடையவை என்பதால், எதிர்க்கட்சி தலைவரின் கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கு இரண்டொரு நாள்களை அவகாசமாகத் தருமாறு கேட்டுக்கொண்டார்.

இரண்டொரு நாள்களுக்குள் முதலாவது கடன்தொகை கிடைத்துவிடும். கடனைப் பெறுவதற்காக, சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட நிபந்தனைகளுக்கு தோள் கொடுத்துக்கொண்டிருக்கும் மக்கள், ஓரளவுக்கேனும் நிம்மதியாக வாழ்வதற்கான நிவாரணங்களை பெற்றுக்கொடுக்க வேண்டியது, இந்த அரசாங்கத்தின் தார்மிக கடப்பாடாகும் என்பதும் நினைவில் இருக்கட்டும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# சர்வதேச நாணய நிதியம் இலங்கையை காப்பாற்றுமா?



எம்.எஸ்.எம். ஐயூப்

இலங்கைக்கு நான்கு வருடங்களுக்கு 2.9 பில்லியன் டொலர் கடன் கொடுப்பது தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில் கடந்த வருடம் செப்டெம்பர் முதலாம் திகதி செய்து கொள்ளப்பட்ட அதிகாரிகள் மட்ட இணக்கப்பாட்டுக்கு, அந்நிதியத்தின் நிறைவேற்றுச் சபை திங்கட்கிழமை (20) ஒப்புதல் வழங்கியுள்ளது.

அந்த இணக்கப்பாட்டுக்கு ஒப்புதலை பெறுவதற்கு, ஆறரை மாதத்துக்கு மேல் செல்வதற்கு சீனாவே காரணமாக இருந்தது. ஏனெனில், இலங்கைக்கு கடன் வழங்கியிருக்கும் நாடுகள் அக்கடன்களை மறுசீரமைக்க உடன்பட்டால் மட்டுமே, நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை மேற்படி இணக்கப்பாட்டுக்கு ஒப்புதல் வழங்கும் என்று அந்த இணக்கப்பாட்டில் குறிப்பிடப்பட்டு இருந்தது. அதன்படி, கடன் வழங்கிய நாடுகளில் சீனா, தாம் வழங்கிய கடன்களை மறுசீரமைப்பதற்கான உத்தரவாதத்தை மிகத் தாமதித்தே வழங்கியது.

நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையின் ஒப்புதலை அடுத்து, இலங்கையில் வெளிநாட்டு செலாவணிப் பிரச்சினை தீர்ந்துவிட்டதாக சில அமைச்சர்கள் கூறியிருந்தனர். ஆனால், நாணய நிதியம் தாம் வழங்க இருக்கும் 2.9 பில்லியன் டொலரில், முதல் கட்டமாக 330 மில்லியன் டொலரை மட்டுமே உடனடியாக வழங்கப் போகிறது.

ஆனால், உலக வங்கியின் முதலீட்டுப் பிரிவான சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம், இலங்கையில் மூன்று வர்த்தக வங்கிகளுக்கு 400 மில்லியன் டொலர் வழங்கப் போவதாக பெப்ரவரி 27ஆம் திகதி அறிவித்து இருந்தது.

நாம், ஏற்கெனவே ஒரு கட்டுரையில் கூறியதைப் போல், நாணய நிதியத்திடம் இருந்து கிடைக்கும் கடன் தொகை, நாட்டில் பெரிதாக தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய அளவில் இல்லை. ஆயினும், அந்நிதியத்தின் தலையீட்டால், இலங்கை வேறு விதமாகவே பயன் பெறப் போகிறது.

பொருளாதார நெருக்கடியின் காரணமாக, இலங்கை மத்திய வங்கி, கடந்த வருடம் ஏப்ரல் மாதம் வெளிநாடுகளிடமிருந்து பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாது என அறிவித்தது. இதன் மூலம் இலங்கை, தாம் வங்குரோத்து அடைந்த நாடாக அறிவித்தாகவே கருதப்படுகிறது.

எனவே, அதன் பின்னர் இலங்கைக்கு வெளிநாட்டு கடன் பெற முடியாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில், நாணய நிதியம் தற்போது இலங்கையின் நிதி நிர்வாக விடயத்தில் தலையிட்டுள்ளது என்ற உத்தரவாதத்தின் காரணமாக, வெளிநாடுகளும் சர்வதேச நிதி நிறுவனங்களும் இலங்கைக்கு மீண்டும் கடன் வழங்க முன்வருகின்றன. இதுவே நாணய நிதியத்தின் பிரதான உதவியாக கருதப்படுகிறது.

அத்தோடு, நாணய நிதியத்தின் தலையீட்டால், இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகள் அக்கடன்களை மறுசீரமைக்க (restructuring) அதாவது, கடனில் ஒரு பகுதியையோ அல்லது வட்டியில் ஒரு பகுதியையோ அல்லது அந்த இரண்டிலும் ஒரு பகுதியையோ கழித்துவிடவும் அக்கடன்களை ஒத்திப் போடவும் முன்வந்துள்ளன. இம்மாத ஆரம்பத்தில், டொலரோடு ஒப்பிடுகையில் இலங்கையின் ரூபாயின் பெறுமதி சற்று அதிகரித்த போதிலும் அப்பெறுமதி மீண்டும் சரியத் தொடங்கி இருக்கிறது.

பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்தவோ, அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்யவோ கைத்தொழில்களுக்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் மூலப்பொருட்களை இறக்குமதி செய்யவோ, நாட்டில் போதியளவில் வெளிநாட்டுச் செலாவணி இல்லை. புதிதாக கடன் பெற்றாவது அப்பணிகளை செய்யவும் நாடு வங்குரோத்து அடைந்திருப்பதால் எவரும் கடன் வழங்க முன்வருவதும் இல்லை.

இலங்கை பொருளாதார ரீதியில் தலைதூக்க நாணய நிதியத்தின் இந்த உதவியைத் தவிர, வேறு எதுவுமே இல்லை. அதுவே, நேற்று முன்தினம் (20) நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை எடுத்த முடிவின் முக்கியத்துவமாகும்.

நாணய நிதியமும் இலங்கை அரசாங்கமும் செய்து கொண்ட அதிகாரிகள் மட்ட உடன்பாட்டை, நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை நிராகரிக்கும் என்ற அச்சம் எவரிடமும் இருக்கவில்லை. எனவே, அந்த ஒப்புதல் கிடைத்தவுடன் உலக வங்கியிடமும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமும் முதலாவது தொகை நிதி கிடைக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த ஏழாம் திகதி பாராளுமன்றத்தில் கூறினார். அந்த இரு நிறுவனங்களிடமும் ஜப்பானிடமும் அரசாங்கம் சுமார் மூன்று பில்லியன் டொலர் கடன் பெறவிருப்பதாக மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் டபிள்யூ. ஏ விஜேவர்தன நேர்காணல் ஒன்றில் கூறியிருந்தார்.

ஒரு நாடு, தமது வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்த முடியாமல் வங்குரோத்து நிலையை அடைந்தால், அந்நிலையிலிருந்து மீள்வதற்கு ஏதாவது ஒரு வழி இருக்க வேண்டும். அந்த வழி எதுவாக இருந்தாலும் அதற்குப் பணம் வேண்டும்; அதற்கும், கடன் பெறுவதைத் தவிர வேறு வழியில்லை. அது தான் இப்போது நடைபெறுகிறது என்றால், அதனை எவராலும் எதிர்க்க முடியாது.

சர்வதேச நாணய நிதியத்தின் தலையீட்டிலான இந்தத் திட்டம், நாட்டை வங்குரோத்து அடையும் நிலைக்கு தள்ளுவதில் முக்கிய பங்காற்றிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால், கடந்த வருடம் மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு முன்னர் நாணய நிதியத்தின் உதவியைப் பெற வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கூறிய போதும், மத்திய வங்கியின் ஆளுநர்களின் ஆலோசனையின் பேரில் அவர் அதற்கு உடன்படவில்லை.

பின்னர், இலங்கையின் கடன் மறுசீரமைப்புப் பணிகளுக்காக நிதி மற்றும் சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காக ‘லஸார்ட் மற்றும் கிளிபர்ட் சான்ஸ்’ என்ற சர்வதேச நிறுவனங்கள் தேர்தெடுக்கப்பட்டன. மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோரின் தலைமையிலான குழுவால் இந்த நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டன. அக்குழுவின் ஆலோசனைப் படியும் நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் படியுமே சம்பந்தப்பட்ட சகல விடயங்களும் இதுவரை முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

கோட்டாபய ராஜபக்ஷ தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருந்தாலும் அல்லது அவர் பதவி துறந்ததன் பின்னர் சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தி அல்லது அநுர குமார திஸாநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி பதவிக்கு வந்து இருந்தாலும்டு இதுவரை நடைபெற்ற இவ்விடயங்கள் மாறப் போவதில்லை.

ஏனெனில் நாணய நிதியமும் மேற்படி ஆலோசனை வழங்கும் நிறுவனங்களும், எந்தக் கட்சி பதவியில் இருந்தாலும், அவற்றின் ஆலோசனைகளை மாற்றிக் கொள்வதில்லை.

உள்நாட்டில் அரசாங்கத்தின் நிதி நிலையை சீர்செய்வதிலும் நாணய நிதியம் எந்த நாட்டுக்கும் ஒரே விதமான ஆலோசனைகளையே வழங்குகின்றன. எந்தக் கட்சி பதவியில் இருந்தாலும்டு அந்நிதியம் அரச செலவினங்களை குறைக்குமாறும் உள்ளூரிலிருந்தே அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்ளுமாறுமே எப்போதும் கூறுகிறது.

செலவினங்களைக் குறைக்க, நலன்புரி நடவடிக்கைகள், மானியங்கள் ஆகியவற்றை குறைக்குமாறும் இரத்துச் செய்யுமாறும் அது கூறும். வரிகளை அதிகரித்து, சில பொருட்களினது விலையையும் சேவைகளினது கட்டணத்தையும் அதிகரித்துடு அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கும்.

இவை, நாணய நிதியத்தின் உதவிகளைப் பெறுவதற்கான நிபந்தனைகளாகும். தற்போதும் அந்நிபந்தனைகளின் பிரகாரமே அரசாங்கம் மின்சார கட்டணத்தையும் வருமான வரியையும் முன்னொருபோதும் இல்லாத அளவில் அதிகரித்துள்ளது. ஸ்ரீ லங்கன் விமானச்சேவை நிறுவனம் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சார சபை ஆகியவற்றை விற்கவும் திட்டமிட்டு இருப்பதாக கூறப்படுகிறது.

எனவேதான், நிறுவனங்களை ‘மறுசீரமைப்பதன்’ மூலம் அரசாங்கம் மூன்று பில்லியன் டொலர் மேலதிக வருமானத்தைப் பெறத் திட்டமிட்ட இருப்பதாக வெளிநாட்டு அமைச்சர் அலி சப்ரி, டிசெம்பர் 15 ஆம் திகதி ‘ரொய்டர்ஸ்’ செய்திச் சேவையிடம் கூறியிருந்தார்.

நாணய நிதியத்தின் இந்த நிபந்தனைகளின் காரணமாக, பொதுமக்கள் வெகுவாகப் பாதிக்கப்படுவதை தவிர்க்க முடியாது. இந்நிபந்தனைகளை நிறைவேற்றுவதோடு குறைந்த வருமானம் பெறுவோருக்கான சமூக பாதுகாப்பு வலையை (social safety net) அமைக்க வேண்டும் என்று நாணய நிதியமும் அரசாங்கமும் அதிகாரிகள் மட்டத்தில் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையில் கூறப்படுகிறது.

ஆயினும், நடைமுறையில் அதற்கான குறிப்பிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக தெரியவில்லை. எனவேதான், இடதுசாரி கட்சிகள் 1960களில் இருந்தே சர்வதேச நாணய நிதியத்தை அணுகுவதை விரும்புவதில்லை.

இந்த விடயத்தில், உதவி பெறும் நாடுகளின் கருத்துகள் பெரிதாக பொருட்படுத்தப்படுவதில்லை. அந்நாடுகளின் அரசாங்கங்களே, அவற்றின் பொருளாதாரம் சீரழியவும் அப்பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப முடியாமல் போனதற்கும் காரணமாயின.

எனவே, பொருளாதாரத்தை மீண்டும் கட்டி எழுப்பும் விடயத்தில் அந்நாடுகளின் தலைவர்களினதும் அதிகாரிகளினதும் கருத்துகளை பொருட்படுத்துவதில் அர்த்தம் இல்லை என நாணய நிதியம் கருதுவதாக இருக்கலாம். அதுவும் ஒரு வகையில் நியாயம் தான்.

நாணய நிதியம், அரசாங்கத்தின் செலவினங்களை குறைத்து, வருமானத்தை அதிகரித்து, வெளிநாட்டுக் கடன்களை ஒத்திப் போடுவதற்கு உதவியளித்து, அந்நாடுகள் மற்றும் நிறுவனங்களிடம் மேலும் கடன் பெறும் சந்தர்ப்பத்தை அளித்து, தாமும் சிறியதொரு கடனை வழங்கி, நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான முதல் அடியை எடுத்து வைக்க அரசாங்கத்துக்கு உதவுவதை மட்டுமே செய்கிறது.

*‘Breathing space’* என்று ஆங்கிலத்தில் கூறப்படும் அந்த நெருக்குதல் குறைந்த அவகாசத்தை பாவித்து, நாட்டை கட்டியெழுப்புவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஆனால், அரசாங்கத்திடம் அதற்கான எந்தவொரு திட்டமும் இருப்பதாகத் தெரியவில்லை.



## வாழ்வியல் தரிசனம்

மனிதனுக்கு வயது ஏறஏற புதுப்புது அனுபவங்களைப் பெறுகின்றான். இந்தச் சுழற்சியில் நல்லதும் கெட்டதுமான விடயங்களையும் நினைவுகூருவதுண்டு.

ஆனால், கூடியவரை, பழைய மனஅழுத்தங்களை விடுத்து, தன்னைப் புதுப்பித்துக் கொண்ட புதுமனிதனாக மாறவேண்டும்.

இதனால், சோர்வேயற்ற, துணிச்சல் மிகு மனிதனாக மாறிவிட முடியும். ஒரு தடவைதான், இந்த உலக வாழ்க்கை என்பது, சகலருக்கும் தெரிந்த விடயம். ஆனால், எம்மவர்கள், இந்த உலகில் நிகழ்காலத்தை விடுத்து, அடுத்த பிறவி குறித்துச் சிந்திக்கிறார்கள். இதைப் பற்றியே எண்ணினால், நிகழ்கால வாழ்வில் புதுமைகளை உருவாக்குவது எப்படி?

தாங்கள் செய்த தவறுகளை, அநேகர் ஏற்றுக்கொள்வதே இல்லை. தவறுகளை உணராமல் விட்டால், பொய்மைக்குள் புரள வேண்டிய துர்ப்பாக்கியமே உருவாகிவிடும்.

காலங்கள் காத்திருப்பதும் இல்லை. எழுச்சிக்கு ஏது உறக்கம்? எழுவதே மகிழ்ச்சி. ஒரு வெற்றியே ஓராயிரம் வெற்றிகளை அளிக்கின்றன. அழகான உலகுக்கு உங்கள் பங்களிப்பு அவசியம்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### சேமிப்புப் பணத்தை வழங்க மறுப்பு; சங்கம் கைவிரிப்பு

கல்வி ஊழியர் சிக்கன கடன் கூட்டுறவு சங்கத்தில் அதிபர், ஆசிரியர்கள் மாதாந்தம் சேமித்து வந்த சேமிப்பு பணத்தை, ஓய்வுபெறும் நேரத்தில் வழங்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி ஊழியர் சிக்கன கடன் கூட்டுறவு சங்கத்தின் அம்பாறை மாவட்ட பிராந்திய காரியாலயத்தில் இந்தச் சேமிப்பு பணத்தை பெறுவதற்கு அதிபர், ஆசிரியர்கள் கடந்த மூன்று மாத காலமாக அலைந்து திரிகின்றார்கள்.

கடந்த மூன்று மாத காலமாக ஓய்வு பெற்ற அதிபர் ஆசிரியர்களுக்கு இந்தச் சேமிப்பு பணத்தை வழங்க மறுப்பு தெரிவிக்கப்பட்டு வருகிறது.

அம்பாறை நகரில் உள்ள, கல்வி ஊழியர் சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கத்தின் அம்பாறை பிராந்திய அலுவலகத்துக்குச் சென்று விசாரித்த போது, “சேமிப்புப் பணத்தை வழங்க எங்களிடம் பணம் இல்லை; நீங்கள் செய்வதை செய்யுங்கள்” என்று, பொறுப்பில்லாமல் பதில் அளிக்கப்பட்டதாக பாதிக்கப்பட்ட அதிபர்களும் ஆசிரியர்களும் தெரிவிக்கிறார்கள். இதனால் கஷ்டப்பட்டு சேமித்த பணத்தை பெற முடியாமல் அதிபர் ஆசிரியர்கள் அதிர்ச்சியும் விரக்தியும் அடைந்துள்ளனர் .

அதிபர், ஆசிரியர்கள் தமது சேமிப்பை பொறுத்து, சுமார் 80,000 தொடக்கம் ஒரு இலட்ச ரூபாய் வரை சேமித்துள்ளனர்.

ஓய்வு பெற்ற அதிபர் ஆசிரியர்களுக்கு கடந்த இரண்டு மாத காலமாக ஓய்வூதியமும் இன்னும் கிடைக்கப்பெறாமல் உள்ளது. அதேவேளை, தான் சேமித்த பணத்தையும் பெறமுடியாமல் இவ்வாறு மறுக்கப்பட்டு வருவதால் அவர்கள் வாழ்க்கை, மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டு, வாழ வழியின்றித் திண்டாடுகின்றார்கள். எனவே, இதுகுறித்து பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

வி.ரி சகாதேவராஜா



சேனாநாயக்கிய மைந்தர்களின்

# 56 வருடகால அபிமான பயணம்

கொழும்பு 07 "கூம்பி கலே"(எறும்புகள் காடு) எனும் இடத்தில் 1967ம் ஆண்டு ஆரம்பிக்கப்பிட்டு அபிமான வரலாற்றையுடைய டீ.ஸ்.சேனாநாயக்க கல்லூரிக்கு 2023 பெப்ரவரி மாதம் 10ம் திகதி 56 ஆண்டுகள் பூர்த்தியானது.

கொழும்பிலுள்ள பிரபல்யம் வாய்ந்த பாடசாலைகளில் 1ம் தரத்திற்கு தமது பிள்ளைகளுக்கான அனுமதியினை பெற்றுக்கொள்ள இன்று நிலவிவரும் அதே போட்டியே அன்றும் பெற்றோர்களிடம் நிலவிவந்தது. அன்றோ கொழும்பு 07 கறுவாத் தோட்ட பகுதியிலே அதி பிரபல்யம் வாய்ந்த பாடசாலையாக காணப்பட்டது கொழும்பு றோயல் கல்லூரி மட்டுமே.

இப்பாடசாலையினுள் தமது பிள்ளைகளை அனுமதிக்காக கோரி பெற்றோர்கள் எழுப்பிய கேள்விக்கு கொழும்பு றோயல் கல்லூரி நிர்வாகத்திடம் பதில் இருக்கவில்லை. 1965ம் ஆண்டு கல்வி அமைச்சராக பணியாற்றிய ஐ.எம்.ஆர்.ஏ. ஈரியகொல்ல மற்றுமொரு பாடசாலையை கொழும்பு 07 பகுதியை அண்டியதாக நிறுவ முன்வந்தார். அப்பாடசாலையே கொழும்பு டீ.எஸ்.சேனாநாயக்க கல்லூரி.

அன்று "கூம்பி கெலே" (எறும்புகள் காடு) என்ற நாமத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட இடத்தில் 1967ம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு பாடசாலை நிறுவப்படுவதற்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகின. கொழும்பு றோயல் கல்லூரியின் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் ஊழியர்களின் பங்களிப்புடன் பாடசாலையின் ஒரு கட்டிடம் மற்றும் அத்தியாவசிய வசதிகள் சிலவும் ஒழுங்கமைக்கப்பட்டது.

அதற்கமைய சிங்கள மொழிமூலத்திற்காக மூன்று வகுப்புகளும் தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலத்திற்காக ஒரு வகுப்பும் என வகுப்பறைகள் பிரிக்கப்பட்டிருந்தன. இப்பாடசாலையின் அதிபராக கொழும்பு றோயல் கல்லூரியின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் நன்மதிப்பை பெற்றிருந்த ஆசிரியர் ஆர்.ஐ.டி. அலஸ் நியமிக்கப்பட்டதோடு இன்னும் 7 ஆசிரியர்கள் பாடசாலையின் கல்வி நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்டார்கள்.

புதிய பாடசாலையின் கொடி மற்றும் இலட்சினை நிர்மாணம் தூரநோக்கு சிந்தனையுடன் முன்னெடுக்கப்பட்டிருந்தது. பாடசாலைக்கு ஒழுக்கம் முக்கியமானது எனும் நோக்கத்தை பிரதிபலிக்கும் முகமாக கறுப்பு மற்றும் பொன் நிறம் பாடசாலையின் உத்தியோகபூர்வ வண்ணமாக தெரிவுசெய்யப்பட்டது.

"தனக்கு முன் நாடு" என்பதே பாடசாலையின் மகுட வாசகமாகும். ஆண் பிள்ளைகள் கல்வி பயிலும் பாடசாலைக்கென உரித்தான தைரியம், செழிப்பு, மற்றும் ஞானம் ஆகிய குணங்களை பிரதிபலிக்கும் நோக்கில் நம் தேசிய கொடியின் சிங்க இலச்சினை,நெற் கதிர்கள் இரண்டு மற்றும் விளக்கு ஆகியன பாடசாலை இலச்சினையில் உள்ளடக்கப்பட்டது.

பாடசாலை கீதமான "சிப் சத சிஸ் வெத" அன்றய காலத்தில் பிரசித்தி பெற்றிருந்த ஊடகவியலாளர் மற்றும் எழுத்தாளருமான பிரேம கீர்த்தி அல்விஸ் அவர்களினால் எழுத்துருப்பெற்று பாடசாலையின் சங்கீத ஆசிரியரான நவரத்ன அத்தநாயக்கவினால் இசையமைக்கப்பட்டது.

முதல் வருடத்திலேயே கல்லூரியிற்கு தரம் 1ற்கான அனுமதிப் பத்திரங்கள் 167 பெறப்பட்டது. அவ்வருடத்தில் பெறப்பட்ட அனைத்து அனுமதிப்பத்திரங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கமைய 1967 பெப்ரவரி மாதம் 10ம் திகதி மு.ப 8.34 மணியளவில் காணப்பட்ட சுப வேளையின் போது சம்பிரதாய பூர்வமாக மங்கல விளக்கேற்றப்பட்டு கரும் பலகையில் "அ" எழுத்து எழுதப்பட்டு டீ.ஸ்.சேனாநாயக்க கல்லூரி எனப்படும் எமது பாடசாலை ஆரம்பமானது.

எமது கல்லூரியின் ஆரம்ப விழா காண வந்த கூட்டத்தின் முன்னர் அதிபர் அலஸ் அவர்களினால் ஆற்றப்பட்ட உரை மிகச் சிறப்பு வாய்ந்தது. பாடசாலை மாணவர்களினதும் பெற்றோர்களினதும் ஒத்துழைப்பு கிடைத்தால் மிகக் குறுகிய காலத்தில் தலை நகரத்தின் முதற் தர பாடசாலைகளில் ஒன்றாக்குவதாகவும், மாணவர்களின் கல்வி மற்றும் பழக்கவழக்கங்கள் சம்பந்தமான அனைத்து பொறுப்புகளையும் தான் உள்ளிட்ட தன் ஆசிரியர் குழாம் இத்துடன் பொறுப்பேற்றுக் கொள்வதாகவும், அனைத்து இன மத நம்பிக்கைகளை மதிக்கும் ஒரு தலைமுறையை கட்டியெழுப்புவதே இப்பாடசாலையின் நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இப்படி கட்டியெழுப்பப்பட்ட டீ.ஸ். சேனாநாயக்க கல்லூரி, மாணவர்களின் இரண்டாவது இல்லமாக ஆனதுடன் பாடசாலை, மாணவர்கள் மத்தியில் மிகவும் விருப்பத்திற்குரிய இடமாக அமையப்பெற வேண்டும் என்ற நோக்கத்திலேயே அதிபர் உள்ளிட்ட ஆசிரியர் குழாத்தினர் பணிபுரிந்தனர். அத்ததுடன் ஆசிரியர்களினால் மாணவர்கள் "என் பொன்னான மைந்தர்களே " எனும் அன்பு நாமத்தினாலேயே அழைக்கப்பட்டார்கள்.

1977ம் ஆண்டளவில் பாடசாலையிலேயே முதன் முறையாக உள்ளெடுக்கப்பட்ட மாணவர் குழாம் சாதாரண தர பரீட்சை எழுத ஆயத்தமாகி இருந்தனர். முதன் முறையாக சாதாரண தர பரீட்சைக்கு தோற்றியிருந்த சேனாநாயக்க மைந்தர்களில் சிங்கள மொழிமூலத்தில் 80%ம் தமிழ் மொழிமூலத்தில் 64%ம் ஆங்கில மொழிமூலத்தில் 62% எனும் அடிப்படையில் தேர்ச்சி பெற்றனர்.



> **பாடசாலைகளுடன் தோளுக்கு தோள் நின்று மோதும் வலிமையை இன்று டீ.ஸ். சேனாநாயக்க கல்லூரி பெற்றிருக்கின்றது**

அத்துடன் ஆங்கில மூலத்தினூடாக பரீட்சைக்கு தொற்றியிருந்த எலம் லுடோவைக் எனும் மாணவன் அம்மொழிமூலத்தில் அகில இலங்கை ரீதியாக அதிக புள்ளிகளை பெற்ற மாணவராக அதி சிறப்பு தேர்ச்சி பெற்றிருந்தார். ஒவ்வொரு வருடமும் பரீட்சை பெறுபேறுகளை அபிவிருத்தி அடையச்செய்யும் நோக்கில் பாடசாலை நேரத்தின் பின்னர் மேலதிக வகுப்புக்களும் இதர கருத்தரங்குகளும் மாணவர் நலன்கருதி ஆசிரியர் குழாத்தினரினாலும் கல்வி அபிவிருத்தி அமைப்பினரினாலும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் விளைவாக 2015ம் ஆண்டு சாதாரண தர பரீட்சையில் 9A சித்தி பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை 110 ஆக உயர்ச்சி அடைந்திருந்தது.

ஆரம்பத்தில் தரம் 1ல் இருந்து சாதாரண தரம் வரை வகுப்புக்கள் நடைப்பெற்றுக் கொண்டிருந்தாலும் உயர் தர வகுப்புக்கள் காணப்படவில்லை. டீ.ஸ்.சேனாநாயக்க கல்லூரி மாணவர்களுக்கு கொழும்பு றோயல் கல்லூரி, ஆனந்த கல்லூரி மற்றும் நாலந்த கல்லூரி ஆகிய பாடசாலைகளில் உயர் தர கல்வியினை தொடரும் வாய்ப்புகள் வழங்கப்பட்டிருந்தது. 1977ம் ஆண்டு நடைப்பெற்ற பெற்றோர் ஆசிரிய பொதுக்கூட்டத்தின் போது உயர் தர கல்விக்காக எதுவித வசதிகளும் இல்லாதமை ஓர் பெரும் குறையாக ஆலோசிக்கப்பட்டது. இதன்போது ஓர் தந்தையினால் முன்வைக்கப்பட்ட கருத்து பின்வருமாறு,

"எமது கல்லூரி மாணவர்கள் பழக்கப்பட்டிருக்கும் கலாசாரம் சற்று வித்தியாசமானது. ஆசிரியர்கள் அவர்களை மகனே! என்றே அழைக்கிறார்கள், மாணவர்கள் ஆசிரியர்களை அழைப்பதும் தமது பெற்றோருக்கு வழங்கும் கௌரவத்துடனாகும். மாணவர்கள் தம்மிடையே அண்ணா தம்பி எனும் உறவு முறையை பேணியவர்களாக பேசுகிறார்கள். அதுமட்டுமா எமது பாடசாலையிலே அனைத்து இன மத பின்னணிக்கு உரித்தான பிள்ளைகள் இருக்கிறார்கள் இப்படிப்பட்ட ஒழுக்கரமான சூழலில் வளர்ந்த பிள்ளைகளை உயர் தரத்திற்காக வேறு பாடசாலைகளுக்கு அனுப்புவதென்பது குற்றமாகும்"

உயர்தர வகுப்புகளை ஆரம்பம் செய்வதில் எண்ணற்ற சவால்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. வகுப்பறைகள், தேர்ச்சிபெற்ற ஆசிரியர்கள், விஞ்ஞானகூட வசதிகள் மட்டுமல்லாது உயர்தர வகுப்புகள் நடைப்பெறும் ஒரு பாடசாலைக்கு தேவையான ஓர் அதிபரும் பாடசாலைக்கு இல்லாமல் இருந்தார். தனது பதவி குறித்து சற்றும் பொருட்படுத்தாத அதிபர் அலஸினால் பாடசாலையின் அபிவிருத்தியை நோக்காக கொண்டு உயர் தரத்திற்கான அனுமதியை கல்வி அமைச்சிடம் கோரினார்.

பல தடைகளை தகர்த்து ஆரம்பிக்கப்பட்ட உயர்தர வகுப்புகள் இன்று கலை,வணிகம்,கணிதம் மற்றும் விஞ்ஞான பிரிவுகளுடன் மாத்திரமல்லாது தொழிநுட்ப பிரிவு வரை விரிவாக்கம் கண்டுள்ளது. இப்பிரிவுகளில் கல்வி பயின்ற மாணவர்கள் உயர் தர பரீட்சையிலே சித்தி பெற்று வைத்திய,பொறியியல்,நீதி மற்றும் வணிக துறைகளில் சேனாநாயக்க நாமத்தை உள்நாட்டு ரீதியில் மட்டுமல்லாமல் சர்வதேச ரீதியில் மிளிரச்செய்து கொண்டிருக்கின்றனர். அத்துடன் "தனக்கு முன் நாடு" என்ற மகுட வாசகத்தை பிரதிபலிக்கும் நோக்கில் டீ.ஸ். மைந்தர்களாக உருவகித்து இராணுவ வீரர்களாக நம் தேசத்துக்காக உயிர் நீத்த தியாகிகளாகவும் உள்ளனர் பல சேனாநாயக்க மைந்தர்கள்.

பாடசாலை பூமியில் எழுப்பப்பட்டிருக்கும் இராணுவ வீர தீரர்களின் நினைவு தூபியே இதற்கு சாட்சி.

இன்று டீ.ஸ்.சேனாநாயக்க கல்லூரியின் கல்வி நடவடிக்கைகள் யாவும் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு இருப்பதுடன் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் பாடசாலையிலுள்ள அனைத்து வகுப்பறைகளிலும் Smart Boardகள் பொறுத்தப்பட்டிருப்பதுடன் அதற்கேற்றாற் போல் wi- fi வளையம் ஒன்றும் பாடசாலை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய பழமைவாய்ந்த கல்வி முறைக்கு மாற்றமாக இன்றைய டிஜிட்டல் உலகிற்கு ஏற்றது போல தம் அறிவை வளர்த்துக் கொள்வதற்கான அனைத்து வசதி வாய்ப்புகளும் டீ.ஸ். மைந்தர்களுக்கு செய்து தரப்பட்டுள்ளது.

> **2015ம் ஆண்டு சாதாரண தர பரீட்சையில் 9A சித்தி பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை 110 ஆக உயர்ச்சி அடைந்திருந்தது**

டீ.ஸ். சேனாநாயக்க கல்லூரியில் விளையாட்டுகளின் ஆரம்பம் சற்றே சுவாரஷ்யமானது. நாளுக்கு நாள் வருடத்திற்கு வருடம் பல அபிவிருத்திகளை கண்டுகொண்டிருந்த இந்த பாடசாலையிலே கல்வி பயில உள் நுழைவதற்கு அனுமதி பெற எத்தனித்த மாணவர்களின் எண்ணிக்கை ஏராளம். 1970 தொடக்கம் 1980 வரையிலான காலப்பகுதியிலேயே டீ.ஸ். சேனாநாயக்க கல்லூரி என்றும் காணாத வளர்ச்சியை கண்டது. இருந்தும் ஓர் விளையாட்டு மைதானம் இல்லாதமையினால் வருடாந்தம் நடைப்பெறும் இல்ல விளையாட்டு போட்டிகள் நடைபெறுவதிலும் ஒரு பெரிய சிக்கல் காணப்பட்டது. இதன்பொழுது கல்லூரி நிலத்தின் சரியாக நடுப்பகுதியிலே சட்டவிரோத குடியிருப்பாளர் ஒருவர் குடிசை ஒன்றை அமைத்து குடியிருந்தார்.

> **"இல்லை மெடம் அதிபர் ஏசுவார் என்பதனால் இல்லை , நாங்கள் இவற்றை விற்று கிடைக்கும் பணத்தில் பாடசாலையிலே வண்ணம் பூசவிருக்கிறோம்"**

பொறுமையாகவும் அனுதாபத்துடனும் சாதுர்யமாகவும் செயற்பட்ட அதிபர் அலஸ் உள்ளிட்ட ஆசிரிய குழாத்தினரினால் அக்குடிசை அங்கிருந்து நீக்கப்பட்டு அந்நிலப்பரப்பு பாடசாலை வசப்படுத்தப்பட்டு அப்பகுதியினை டீ.ஸ். சேனாநாயக்க கல்லூரியின் விளையாட்டு மைதானமாக்கப்பட்டது. அரவிந்த டீ சில்வா, ஹஷான் திலகரத்ன, கோசல குறுப்புஆராச்சி, புபுது தசநாயக்க, நவீட் நவாஸ், புலஸ்தி குணரத்ன, இசுறு உதான,பினுற பெர்ணாந்து என டீ.ஸ். மைதானத்தில் விளையாடியவர்களாக சர்வதேச கிரிக்கட் திடலில் நம் தேசத்தின் நாமத்தை மிளிரச் செய்த இவர்கள் அனைவரும் எமதினிய டீ.ஸ். மைந்தர்களே.

இன்றைய காலத்தில் டீ.ஸ். பூமி ஐம்பதிற்கும் அதிகமான விளையாட்டுக்களை தன்னகத்தே கொண்டு அபிவிருத்தி அடைந்துள்ளது. புதிய விளையாட்டு மைதானம், உள்ளக விளையாட்டு அரங்கம், நீச்சல் தடாகம், உடல் ஆரோக்கியத்தை வளப்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்ட ஓர் உடற்பயிற்சி கூடம் மட்டுமல்லாது இலங்கையின் முதலாவது பாடசாலை வில் வித்தை அரங்கம் மற்றும் இலங்கை பாடசாலைகளில் இதுவரை ஆரம்பிக்கப்பட்டிராத நவீன துப்பாக்கிச் சூட்டு அரங்கம் ஆகிய வசதிகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது கொழும்பு டீ.ஸ்.சேனாநாயக்க கல்லூரி. இந்த அனைத்து வசதிகளையும் சரிவர பயன்படுத்தி 56 வருடங்கள் எனும் குறுகிய கால எல்லையில் சேனநாயக்க மைந்தர்கள் வசம் காணப்படும் தேசிய மற்றும் சர்வதேச மட்ட சாதனைகள் ஏராளம்.

2022ம் ஆண்டின் ஆசிய இளையோருக்கான மெய்வல்லுனர் போட்டியின்போது உயரம் தாண்டுதல் வெண்கல பதக்கம், 2019ம் ஆண்டின் ஆசிய ஸ்கொஷ் போட்டித்தொடரில் வெண்கல பதக்கம், 2022ம் ஆண்டில் ஆசிய பாடசாலைகளுக்கான செஸ் போட்டியிலே வெண்கல பதக்கம், 2021 ஆசிய இளையோருக்கான பரா நீச்சல் போட்டியிலே 400 மீட்டர் ஃப்ரீஸ்டைல் போட்டியில் வெண்கலப் பதக்கம், 2019ம் ஆண்டின் தென்னாசிய பூப்பந்தாட்ட குழு போட்டியிலே வெள்ளி பதக்கம், 21 வயதுக்குட்பட்டோர்க்கான தென்னாசிய விளையாட்டு தொடரில் கலப்பு பூப்பந்தாட்ட தொடரின் 2ம் இடத்தை எம் டீ.ஸ் மைந்தர்கள் வெற்றியீட்டியதோடு 2019ம் ஆண்டின் 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கட் உலகக்க் கோப்பைக்கான இலங்கை அணியின் தலைவர் மலிந்த கஜநாயக்கவும் சேனாநாயக்க மைந்தன் ஆவார்.



அழகியல் பிரிவிலும் டீ.ஸ். மைந்தர்கள் எண்ணற்ற திறமைகளை வெளிக்காட்டியுள்ளனர். 2022 இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான நாடக போட்டிகளிலே தேசிய ரீதியில் பல வெற்றிகளை பெற்றதோடு மேலைத்தேய மற்றும் கீழைத்தேய வாத்திய குழுவினரும் உள்ளடங்களாக பாடசாலையின் நடனக் குழுவினரும் தமக்கென தனித்துவமான இடமொன்றினை மற்ற பாடசாலைகள் மத்தியில் பெற்றுள்ளனர். வருடாந்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த ஓரா, பன்சிலு போன்ற நிகழ்வுகள் எம் கல்லூரி மாணவர்களின் அழகியல் சார்ந்த திறமைகளை முழு நாட்டிற்கும் தெரியப்படுத்தும் வண்ணம் ஒழுங்கு செய்து நடாத்தப்பட்ட சிறப்பு நிகழ்வுகளாகும்

இணைப்படவிதான செயற்பாடுகளான தோட்டப்பயிர்ச் செய்கை போன்ற விவசாய நடவடிக்கைகளிலும் டீ.ஸ். மைந்தர்கள் முன்னோடிகளாக காணப்பட்டார்கள். கல்லூரியின் ஆரம்ப நாட்களில் இருந்து அதிபர் அலஸ் அவர்களின் வழிகாட்டுதலுக்கு இணங்க ஆரம்பிக்கப்பட்ட இச் செயற்திட்டம் பின் நாட்களில் கொழும்பு மற்றும் அதனை அண்மித்த புற நகர் பகுதிகளில் அமைந்திருந்த பாடசாலைகளினாலும் உதாரணமாக உள்வாங்கப்பட்டது.

1973ம் ஆண்டு பாடசாலைகள் மத்தியில் அதி உயர்தரத்திலான விவசாய நிலமொன்று கட்டியெழுப்பபட்டிருந்தமையினால் இவ் விவசாய நிலத்தினை மேலும் மெருகூட்டும் நோக்கில் கொழும்பு லயன்ஸ் கழகத்தினால் பலதரப்பட்ட உபகரணங்கள் நன்கொடையாக வழங்கி வைக்கப்பட்டது.

அவ்வருடமே பாடசாலையின் பரிசளிப்பு விழாவிற்கு வருகை தந்திருந்த அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க டீ.ஸ் மண்ணில் விளைவிக்கப்பட்டிருந்த அழகான திராட்சை குலைகளை பார்த்து பிரமிப்புடன் அருகே இருந்த மாணவரிடம் கேட்டார் " பிள்ளைகளே நீங்கள் இந்த திராட்சை குலைகளை பறிக்காமல் இருப்பது அதிபர் ஏசுவார் என்பதனாலேயா" என்று அருகில் இருந்த மாணவனின் பதில் இப்படி இருந்தது "இல்லை மெடம் நாங்கள் இந்த குலைகளை பறிக்காமல் இருப்பது அதிபர் ஏசுவார் என்பதனால் இல்லை , நாங்கள் இவற்றை விற்று கிடைக்கும் பணத்தில் பாடசாலையிலே வண்ணம் பூசவிருக்கிறோம்" என்பதாகும்.

> **அன்று "கூம்பி கெலே" [எறும்புகள் காடு] என அடையாளப்படுத்தப்பட்ட இடத்தில் 1967இல் ஒரு பாடசாலை நிறுவப்படுவதற்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகின**

இச் சம்பவத்தின் ஊடாக எமக்கு தெரிவது ஒன்றே ஒன்றுதான் அது வேறொன்றும் இல்லை சேனாநாயக்க மைந்தர்களின் பண்பும் தம் கல்லூரி மீது வைத்திருக்கும் அபிமானமுமே ஆகும்.

ஐம்பத்தாறு வருடகால டீ.ஸ். சேனாநாயக்க கல்லூரியின் அபிமான பயணத்தில் நிச்சயம் நினைவு கூறத்தக்க எம் கல்லூரிக்காக அளப்பரிய சேவையாற்றிய அதிபர்கள் சிலர் காணப்படுகின்றனர் சிலர் பீ.சமரசிங்க, தர்மசேன, எம்.ஏ.ஜே.ஏ. மாயாதுன்ன, சோமபந்து கொடிகார, பீ.சீ அதிகாரி, அசோக சேனானி ஹேவகே, டீ.எம். டீ திசாநாயக்க, ஆர்.எம்.எம் ரத்நாயக்க, பிரசன்ன உடுமுஹந்திரம் ஆகியோர் ஆவர். டீ.ஸ். சேனாநாயக்க கல்லூரியின் தற்போதய அதிபர் சம்பத் வேரகொட ஆவார்கள்.

டீ.ஸ். சேனாநாயக்க கல்லூரியின் நிறுவுனர் அதிபர் ஆர்.ஐ.டி அலஸினால் என்றும் நினைவு கூறப்பட்ட டீ.ஸ். சேனாநாயக்க கல்லூரியை தாங்கி நிற்கும் அந்த நான்கு தூண்கள் என குறிப்பிடப்பட்டது பாடசாலையை முதலில் கட்டியெழுப்ப உதவிய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்களே இந்த தூண்கள் ஆவார்கள் என அவர் அடிக்கடி குறிப்பிடலானார்.

நம் பாடசாலையின் முன்னேற்றத்தின் ரகசியம் மேற் குறிப்பிட்ட அனைவரினதும் ஒற்றுமையும் தியாகமுமாகும் என அதிபர் திரு. ஆர்.ஐ.டி. அலஸ் அவர்கள் ஆணித்தரமாக நம்பினார். அந்த நம்பிக்கையை உண்மைப்படுத்தியதாக 56 வருடகால குறுகிய வரலாற்றை மாத்திரம் கொண்டு பல நூற்றாண்டு கால வரலாற்றையுடைய பாடசாலைகளுடன் தோளுக்கு தோள் நின்று மோதும் வலிமையை இன்று டீ.ஸ். சேனாநாயக்க கல்லூரி பெற்றிருக்கின்றது.

இந்தியா

# கிஷிடாவுக்கு பானிபூரி கொடுத்த மோடி

ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா அரசுமுறைப் பயணமாக நேற்றுமுன்தினம் இந்தியா வந்தடைந்தார்.

இதன்போது அவருக்கு புதுடெல்லி விமான நிலையத்தில் வைத்து உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து புதுடெல்லியில் உள்ள ஐதராபாத் இல்லத்தில் இந்திய பிரதமர் மோடியை அவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது புமியோ கிஷிடாவுக்கு சந்தன மர புத்தர் சிலையொன்றை மோடி பரிசாக வழங்கினார். அதனைத் தொடர்ந்து புதுடெல்லியில் உள்ள புத்த ஜெயந்தி பூங்காவுக்குச் சென்ற கிஷிடா, பிரதமர் மோடியுடன் பூங்காவை பார்வையிட்டார்.

பின்னர் அங்கே



அமைக்கப்பட்டிருந்த பானி பூரி கடையில் மோடியுடன் சேர்ந்து பானி பூரியை ரசித்து ருசித்து உண்கொண்டார்.

இது குறித்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



பாட்னா

## ரயில் நிலையத்தில் ஓடிய ஆபாச வீடியோ

ரயில் நிலைய விளம்பரத் திரையில் திடீரென ஆபாச காட்சிகள் ஒளிபரப்பான சம்பவம் பீகாரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாட்னா ரயில் நிலையத்தில் உள்ள விளம்பரத் திரையிலேயே இவ்வாறு மூன்று நிமிடங்களுக்கு ஆபாச காட்சிகள் ஒளிபரப்பாகியுள்ளன.

இதனைப் பார்த்த பொதுமக்கள் முகம்சுழித்த நிலையில், ரயில்வே நிர்வாகத்திற்கு இதுகுறித்து தகவல் அளிக்கப்பட்டது

இதனையடுத்து ரயில்வே பொலிஸார் தொழில்நுட்ப பிரிவு அதிகாரிகளை தொடர்பு கொண்டு வீடியோ காட்சியை உடனடியாக அகற்றினர். அதே சமயம் சம்மந்தப்பட்ட விளம்பர நிறுவனத்திற்கு அபராதம் விதிக்கப்பட்டதுடன், ஒப்பந்தமும் இரத்து செய்யப்பட்டது.



புதுச்சேரி

## கடலில் இறங்கிப் போராட்டம்; அரச சார்பு ஊழியர்கள் கைது

அரசு சார்பு நிறுவனமான ‘பாப்ஸ்கோ‘ நிறுவனம் மூடப்பட்டுள்ள நிலையில், அதன் ஊழியர்கள் தமது 65 மாத சம்பள நிலுவையை வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த ஒரு வாரமாக சட்டப்பேரவைக்கு அருகில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இதன் அடுத்த கட்டமாக நேற்றைய தினம் புதுச்சேரியில் மூடப்பட்டிருக்கும் அனைத்து அரசு சார்பு நிறுவனங்களை உடனே திறக்கக் கோரியும், நிலுவை ஊதியத்தை வழங்க வலியுறுத்தியும் பாப்ஸ்கோ ஊழியர்கள் கடலில் இறங்கிப் போராட்டம் நடத்தியதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து கடலிலில் இறங்கி போராட்டம் நடத்தியவர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

ரஷ்யா

# புட்டினுடன் கை கோர்த்த ஜின்பிங்; உலக நாடுகள் அதிர்ச்சி

நேட்டோ படையுடன் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ரஷ்யா கடந்த ஒரு வருடங்களாக உக்ரேன் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது.

இதன்காரணமாக அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளும் ரஷ்யாவின் தாக்குதலை எதிர்கொண்டு பதில் தாக்குதல் நடத்துவதற்கு உக்ரேனுக்கு பல மில்லியன் மதிப்புள்ள இராணுவ உதவிகளை வழங்கி வருகின்றன.

அதே சமயம் சீன அரசு ரஷ்யாவுக்கு தனது ஆதரவைத் தெரிவித்து வருகின்றது.

இந்நிலையில் சீன ஜனாதிபதி சி ஜின்பிங் அரசுமுறைப் பயணமாக நேற்றுமுன்தினம் (20) ரஷ்யாவுக்குச்



சென்றுள்ளமை உலக நாடுகள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அந்தவகையில் ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவை வந்தடைந்த சீன ஜனாதிபதி சி ஜின்பிங், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை சந்தித்ததாகவும் இதன்போது உக்ரேன்- ரஷ்யாவுக்கு இடையிலான போர் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இருவரும் கலந்துரையாடியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்லாந்து

## முதலிடத்தில் பின்லாந்து

உலகின் மகிழ்ச்சியான நாடுகளுக்கான தரவரிசை பட்டியல் நேற்றுமுன்தினம் (20) வெளியிடப்பட்டது.

இப்பட்டியலானது ‘ஒரு நாட்டின் மகிழ்ச்சி, சமூக ஆதரவு, வருமானம், சுகாதாரம், சுதந்திரம், தாராள மனப்பான்மை மற்றும் ஊழல் இல்லாமை’ ஆகியவற்றைக்கொண்டு அளவிடப்படுகிறது.

அந்தவகையில் இப்பட்டியலில் தொடர்ந்து 6ஆவது ஆண்டாக பின்லாந்து முதலிடத்தைப் பிடித்துள்ளது. டென்மார்க், ஐஸ்லாந்து, இஸ்ரேல், நெதர்லாந்து, சுவீடன், நோர்வே, சுவிட்சர்லாந்து நாடுகள் அடுத்தடுத்த இடங்களில்



உள்ளன.

முதல் 20 நாடுகள் பட்டியலில் லிதுவேனியா மாத்திரம் புதிதாக இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பட்டியலில் இலங்கை 112 ஆவது இடத்திலும், இந்தியா 136ஆவது இடத்திலும் உள்ளன.

இதே சமயம் மகிழ்ச்சியற்ற நாடுகள் பட்டியலில் போரினால் பாதிக்கப்பட்ட ஆப்கானிஸ்தான் முதலிடத்திலும், லெபனான் 2ஆவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல்லில் வலைபந்து வீச்சாளராக வியாஸ்காந்த்

எஸ். நிதர்ஷன்

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி. எல்), ராஜஸ்தான் றோயல்ஸின் வலைப்பந்துவீச்சாளராக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விஜயகாந்த் வியாஸ்காந்த் தெரிவாகியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே குறித்த விடயத்தை வியாஸ்காந்த் வெளிப்படுத்தியிருந்தார்.

இந்நிலையில், வியாஸ்காந்த் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

“பங்களாதேஷில் விளையாடியது எனக்கு



நிறைய அனுபவங்களும், சர்வதேச விளையாட்டு வீரர்களின் அறிமுகங்களும் கிடைக்கப்பெற்றன. என்னுடன் குமார் சங்கக்கார கதைத்து இருந்தார். எனது கிரிக்கெட்டை அடுத்து கட்டத்துக்கு எடுத்துச் செல்ல கவனிக்கிறேன் என்றார். அது தொடர்பில் சிலருடன் கதைத்து எனக்கான வாய்ப்புக்களைப் பெற்று தந்துள்ளார். அவருக்கு எனது நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன். எனக்கு கிடைத்துள்ள வாய்ப்புகளை நான் முடிந்தளவு பயன்படுத்தி என்னை வளர்த்துக் கொள்வேன்” என்றார்.



## டொட்டென்ஹாமிலிருந்து விலகும் கொன்டே?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் முகாமையாளரான அன்டோனியோ கொன்டே, கழகத்தை விட்டு இவ்வாரம் செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏனெனில், இன்னொரு பிறீமியர் லீக் கழகமான செளதாம்டனுக்கெதிரான போட்டியைத் தொடர்ந்து கொன்டே தெரிவித்த கருத்துக்களானவை, டொட்டென்ஹாமின் வீரர்கள் சிலருடனான உறவைப் பாதித்துள்ளதாகக் கூறப்படுகிறது.



இன்று மூன்றாவது போட்டி:

## தொடரைக் கைப்பற்றப்போவது இந்தியாவா, அவுஸ்திரேலியாவா?

இந்திய, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேசப் போட்டியானது, சென்னையில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இத்தொடரின் முதலாவது போட்டியில் இந்தியாவும், இரண்டாவது போட்டியில் அவுஸ்திரேலியாவும் வென்ற நிலையில் இப்போட்டியானது தொடரைத் தீர்மானிக்கும் போட்டியாகக் காணப்படுகிறது.

முதலிரண்டு போட்டிகளிலும் வேகப்பந்துவீச்சின் ஆதிக்கம் காணப்பட்ட நிலையில், சென்னை ஆடுகளமானது சுழற்பந்துவீச்சுக்கு சாதகமானதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்த வரையில் டேவிட் வோர்னர், கிளென் மக்ஸ்வெல் ஆகியோர் அணிக்குத் திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தேசிய ரீதியில் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு பெருமை சேர்த்த

## வீரர்களுக்கு மட்டக்களப்பில் கௌரவிப்பு

எம்.எஸ்.எம். நூர்தீன்

மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு தேசிய ரீதியில் வரலாற்று சாதனையை முதற்தடவையாக பெற்றுக் கொடுத்த சிறைச்சாலை உத்தியோகத்தர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வானது மட்டக்களப்பில் அண்மையில் இடம்பெற்றது.

தேசிய ரீதியில் சாதனை நிலைநாட்டிய வீரர்களுக்கு பதக்கம் அணிவித்து, சான்றிதழ், பணப்பரிசு உள்ளிட்ட நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இச்சாதனையைப் படைப்பதற்காக பயிற்சியை வழங்கிய பயிற்றுவிப்பாளர் வே. திருச்செல்வத்துக்கு



சிறைச்சாலை அத்தியட்சகரால் கௌரமளிக்கப்பட்டதுடன், பணப்பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இலங்கை சிறைச்சாலைகளுக்கிடையிலான மல்யுத்தப் போட்டிகளில் ஒன்பது தங்கப் பதக்கங்கள், இரண்டு வெள்ளிப் பதக்கங்கள், நான்கு வெண்கலப் பதக்கங்கள் அடங்கலாக 15 பதக்கங்களைப் பெற்று தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்று சம்பியனாக மட்டக்களப்பு சிறைச்சாலை வீரர்கள் தெரிவாகியுள்ளனர்.

அமெரிக்கா



## 92 வயதில் 5வது திருமணம் செய்த பிரபலம்

சர்வதேச ஊடகத்துறையின் ஜாம்பவான் என அழைக்கப்படும் ஃபாக்ஸ் நியூஸின் ஸ்தாபகரான ரூபெர்ட் முர்டாச் தனது 92 ஆவது வயதில் ஐந்தாவது முறையாகத் திருமணம் செய்துகொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளார்.

திருமணமாகி கணவரை இழந்த ஆன்லெஸ்லி ஸ்மித் என்ற பெண்ணுடன் தான் காதல் வயப்பட்டதாகவும், இது தனது கடைசி காதலாக இருக்கும் என்றும், வருகிற கோடைகாலத்தில் ஆன்லெஸ்லியை திருமணம் செய்துகொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 22 மார்ச் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.